மலர்-5 இதழ்-126 நவம்பர் 16-30 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர் mobile app

GET IT ON Google Play

மாதமிருமுறை




வாபரனன் என்பதை வாபர் என்று மாற்றி ஐயப்பன் சரிதத்தில் பொய் கதை புனைந்த அவலம்?

www.aanmeegamalar.com e- magazine e- magazine

## தில்லை சிவத்தலம் மட்டும் அல்ல பழங்கால விண்வெளி ஆராய்ச்சி கூடம்

# ஐயப்பன் அற்புத தகவல்கள்

- சைவம் மற்றும் வைணவபிரிவுகளின் ஒற் றுமை உருவமாக பார்க்கப்படுகிற புண்ணிய கோவில் சபரிமலை
- மதுரையில் இருந்து தன் சொந்த அமைச்சர்களால் உயிருக்கு ஆபத்து என கருதி சென்ற ராஜசேகர பாண்டியன் திருவிதாங்கூர் மன்னனால் உதவப்பட்டு பந்தள தேசத்து மன்னனாக ஆட்சி செய்தான். அவனின் வளர்ப்பு மகனே ஐயப்பன்
- ராஜசேகர பாண்டியன் பம்பை நதிக்கரையில் வேட்டையாட சென்றபோது கண்டெடுத்த கடவுள் அவதாரமே குழந்தை மணிகண்டன் (ஐயப்பன்).
- 12 வயது வரை மணிகண்டன் மனிதஉருவமாக வளர்ந்து தன அவதார நோக்கம்முடிந்த உடன் தியானம் செய்ய சென்ற இடமே இன்றைய சபரிமலை.
- பந்தள வம்சத்தை சார்ந்த நபர்கள் இன்றும் சபரிமலை செல்வதில்லை. தன் தந்தை ராஜசேகர பாண்டியன் சபரிமலை வந்தால் ஐயப்பன் எங்கு எந்தித்துவிடுவாரோ என்று அவர் கால்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. அதனால் தான் அந்த ஐதீகம் இன்றும் கடைபிடிக்கப்படுகிறது.
- பந்தள மன்னர் ராஜசேகர பாண்டியன் தன் வளர்ப்பு குழந்தை ஐயப்பனுக்காக செய்ததே திருவாபரண பெட்டி. இதில் தங்கத்தில் சிறிய வடிவில் புலி, யானை, வாள், மாலை போன்றவை உள்ளன. ஓலை சுவடிகளை இன்றும் காணலாம்.
- ராஜசேகர பாண்டியன் தன் மனைவி தலைவலி என்று சொல்லி புலியின் பாலை அடர்ந்த காட்டிற்குள் ஐயப்பனை கொண்டு வர சொன்னபோது இரண்டு முடிச்சுக்களில் பாதுகாப்பிற்கு தேவையான பொருட்களை கொடுத்து அனுப்பியதே இன்று இரு முடியாக ஐயப்ப பக்தர்கள் பின்பற்றுகின்றனர்.
- ஹரிவராஸனம் விச்வமோஹனம் என்ற புகழ்பெற்ற கே.ஜே.யேசுதாஸ் பாடியபாடலே நடை அடைப்பில் ஐயப்பன் உறங்குவதற்காக இசைக்கப் படுகிறது. இந்த பாடலை எழுதியவர் கம்பங்குடி ஸ்ரீகுளத்துஐயர். இவர் பூர்வீகம் திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சி
- Memoir of the survey of Travancore and Cochin states என்ற ஆங்கிலேயர் 1894ல் எழுதிய புத்தகத்தில் சபரிமலைக்கு செல்வோர் அப்போதே ஆண்டு தோறும் 15,000 என்று குறிப்பிட்டு இருக்கிறார். அப்போதைய மக்கள்தொகை தென் இந்தியாவில் 5 கோடிக்கும் கீழ்.
- பரசுராமரால் பிரதிஷ்டை பண்ணப்பட்ட ஐயப்பன் சிலை 1950–ல் தீவிபத்தில் சேதம் அடைந்தது. இன்று அந்த சிலை உருக்கபட்டு கோவில் மணியாக கொடி மரம் அருகே காட்சி அளிக்கிறது.
- தீ விபத்தை தொடர்ந்து சிலையை யார் செய்ய வேண்டும் என்ற தேவபிரசன்ன குடவோலை முறைப்படி, ஐயப்பன் சந்நிதியில் சீட்டுப் போட்டு பார்க்கப்பட்டது. அதில் மதுரை ராஜமாணிக்கம் பிள்ளையும்பி.டி.ராஜனும் பெயர்கள் வந்தன. அவர்கள் வழங்கிய விக்கிரகத்தைத் தான் இன்றைக்கும் தரிசித்துக் கொண்டிருக்கிறோம். அந்த சிலை கும்பகோணத்தில் அடுத்த சுவாமிமலையில் தேசிய விருது பெற்ற சிற்பக்கலைஞர் ராமசாமி ஸ்தபதியால் செய்யப் பட்டது.
- கேரளாவில் கோயில்களில் பராமரிப்பு பணிகளோ, முக்கிய மாற்றங்களோ நடத்த வேண்டும் என்றால் கடவுளிடம் அனுமதி கேட்பதற்காக 'தேவ பிரசன்னம்' என்ற பூஜை நடத்தப் படுவது வழக்கம். அதன்படியேஇன்றும் சபரிமலையில் பெண்கள் அனுமதிக்கப்



பட வேண்டுமெனில் தேவபிரசன்னம்செய்யப் பட்டு கடவுளின் அனுமதி பெற வேண்டும் என்பது கோவில் நிர்வாகத்தின் முடிவு.

- Kamakhya Temple (Guwahati, Assam), Lord Kartikeya Temple (Pehowa, Haryana and in Pushkar, Rajasthan) Haji Ali Dargah (Mumbai, Maharashtra) Mangal Chandi Temple, (Bokaro, Jharkhand) Sree Padmanabhaswamy Temple (Malayinkeezhu, Kerala) Patbausi Satra (Barpeta, Assam) Jain Temple (Ranakpur, Rajasthan) போன்ற கோவில்களை போல சபரிமலையும் பெண்களை அனுமதிப்பதில்லை.
- ஐயப்பனை சாஸ்தாவாக வழிபடும் முறை தமிழகத்தில் இருப்பதே. முக்கியமாக தென் மாவட்டங்களில் அய்யனார் வழிபாடு மிக பிரபலம். அதில் ஆதி சாஸ்தாவாக காட்சி அளிக்கும் இடமே சொரிமுத்து அய்யனார் கோவில் பாபநாசம்,
- விரத முறையில் உணவை உண்டு அன்ன தானம் செய்ய வேண்டும் என்பது சபரிமலை யாத்திரையில் மட்டுமே. மற்ற முறைகளில் விரதம் என்றால் உணவை உட்கொள்ளாமல் இருப்பது.
- ஏழை, பணக்காரார், சாதி, உயர் அதிகாரி, பாமரன் என பாகுபாடு அன்றி அனைவரையும் சாமியாக பார்ப்பதே சபரிமலையின் தனிசிறப்பு.
- 41 நாட்கள் விரதம் இருக்கும் முறை சபரிமலை யாத்திரையில் மட்டுமே காணப்பட கூடிய ஒன்று. வேறு எந்த கோவிலிலும் காண முடியாத கடுமையான விரத முறை.
- அடர்ந்த காட்டிற்குள் வன விலங்குகள் தாக்கும் அபாயத்திற்கு மத்தியில் நடைபயனமாக 60 கிலோ மீட்டர் செல்வது சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு மட்டுமே
- கேரள கட்டுமான முறையையும் தமிழ்நாட்டின் சாஸ்தா வழிபாட்டையும் இணைத்து இரு மாநிலத்தின் ஒற்றுமை சின்னமாக இருப்பது சபரிமலை
- மணிகண்டன் கல்வியை குருவிடம் தான் பயில வேண்டும் என்று ஆசைப்பட்ட ராஜ சேகர பாண்டியனின் ஆசையே இன்று குரு தத்துவமாக குருசாமியாக ஐயப்ப யாத்தி ரையில் இருக்கிற வழக்கம். தன்னை காண வேணுமெனில் குரு மூலமாகத் தான் வர வேண்டும் என்று ஆசைப்பட்டவர் ஐயப்பன்
- மற்ற கோவில்களை போல் தினமும் அல்லாமல் ஆண்டில் வெறும் 120 நாட்களுக்கும் குறைவாக நடை திறந்து இருக்கும் கோவில் சபரிமலையே
- இன்று போல் அடர்ந்த காட்டில் சாலை,ஹோட்டல்கள் இல்லாத காலத்தில் தமிழக பக்தர்களுக்காக உணவும் பேருந்து வசதியையும் ஏற்படுத்தி குருவாக இருந்தவர் நாகர்கோவிலை பூர்வீகமாக கொண்ட புனலூர் தாத்தா சுப்ரமணிய அய்யர்.
- சபரிமலைக்கு மற்ற கோவில்களை போல் குறிப்பிட்ட வருடங்களுக்கு பிறகு கும்பாபிஷேகம் செய்கிற வழக்கம் இல்லை. ஆண்டுதோறும் வரும் பக்தர்களின் பக்தியாலும் அதன் சக்தி குறையாமல் ஒவ்வொரு வருடமும் அதன் சைதன்யம் கூடிக்கொண்டே செல்வதாக நம்பப்படுகிறது.
- பரசுராமர் உருவாக்கிய சிறிய ஆலயத்தைமாற்றி அமைத்து பதினெட்டுபடிகளோடு உருவாக்கி யவர் பந்தள அரசர் ராஜசேகர பாண்டியன்.
- சபரிமலையை தவிர மற்ற கோயில்களில் சாஸ்தாவை வீராசனத்தில் காணலாம். அதன் படி, சாஸ்தாவின் ஒரு கால் நிலத் திலும், மறுகால் மடித்தபடியும் இருக்கும். மடித்த காலையும் இடுப்பையும் சேர்த்துக் கட்டப் பட்டிருக்கும் பட்டம் வீரப்பட்டம் எனப்படும்.


www.aanmeegamalar.com

# கார்த்திகை தீபம்

தமிழ் மாதங்களில் எட்டாவது மாதமான கார்த்திகை பல்வேறு சிறப்புகளை கொண்டுள்ளது. அக்னி ரூபமாய் போற்றப்படும் சிவனுக்கும், அக்னியில் உதித்த ஆறுமுகனுக்கும், காக்கும் கடவுளான விஷ்ணுவுக்கும் உகந்த மாதமாக கார்த்திகை மாதம் பக்தர்களால் போற்றப்படுகிறது.

கார்த்திகை திருநாள் கார்த்திகை மாதம் கிருத்திகா நட்சத்திரத்தில் கார்த்திகை கொண் டாடப்படுகிறது.

இந்த ஆண்டு கார்த்திகை தீபத் திருவிழா 19.11.2021 வெள்ளிக்கிழமை கொண்டாடப் படுகிறது.

## அகல் விளக்கேற்றி:

கார்த்திகை திருநாளன்று வீடுகள் தோறும் அகல் விளக்கால் அலங்கரிக்கப்படும். இந்த நாளன்று நெல் பொரியும், அவல் பொரி யும் வெல்லப்பாகிலிட்டு பரம்பொருளான சிவபெரு மானுக்கு நிவேதனம் செய்வது வழக்கம்.

## திருவண்ணாமலையில் கார்த்திகை:

கார்த்திகை திருநாள் திருவண்ணாமலையில் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பஞ்ச பூதங்களில் நெருப்புக்குரிய தலமாக திகழ்வது திருவண்ணாமலை. திருவண்ணாமலையில் தான் சக்தியும் சிவனும் அர்த்தநாரீஸ்வர கோலத்தில் கலந்தனர். இதனால் கணவன் மனைவி இருவரும் ஒன்றாக சேர்ந்து குடும்பத்தை சண்டை சச்சரவுகள் இல்லாமல் வழிநடத்தவும் இந்த கார்த்திகை தீபத்தை கொண்டாடலாம்.

எங்கெங்கு காணினும் விளக்குதான்.

தீபத்தன்று நாம் ஏற்றும் விளக்கின் ஒளியானது யார் மீதெல்லாம் படுகிறதோ, அவர்களுக்கெல்லாம் மறுபிறவியில் துன்பம் இல்லை என்று கூறப்படுகிறது. இது மனிதர்களுக்கு மட்டுமல்ல நம் பூமியில் வாழும் புழு, பூச்சி, கொசு, தாவரங்கள், விலங்குகள் இப்படி எல்லா ஜீவராசிகளுக்கும் பொருந்தும். இதன் காரணமாகத்தான் வீடு முழுவதும் விளக்கேற்றி வைத்து வீட்டைச் சுற்றியுள்ள தாவரம், பூச்சி, உயிரினங்களும் முக்தி அடையவைக்கும் நோக்கத்தில்தான் வீடுகளில் விளக்கேற்றி வழிபடுகின்றனர்.

விளக்கின் ஒளி புற இருளை போக்கும். ஈசனின் நினைவு அக இருளைப் போக்கும். கார்த்திகை தினத்தன்று மாலை அகல் விளக்குகளுக்கு குங்குமப் பொட்டு வைக்கப்பட்டு, அதில் எண்ணெய் ஊற்றி,பஞ்சாலோ, திரியாலோ



ஆன திரியைப் போட்டு பூஜை செய்து, விளக்கு ஏற்றப்பட்டு வீட்டின் அறைகளிலும், ஜன்னல்களிலும், வாசலிலும் ஏற்றி வைக்கப்படும்.

தீபம் ஏற்றும் முறை கார்த்திகை தீபத்தன்று குறைந்தபட்சம் 27 தீபங்கள் ஏற்றுவது நல்லது. வீட்டு வாசலில் குத்து விளக்கில் தீபம் ஏற்றுவதை சிலர் வழக்கமாக வைத்திருப்பார்கள். இந்த நாளில் நைவேத்தியமாக அவல், கடலை நெல்பொரி, அப்பம் இவற்றை இறைவனுக்கு படைப்பார்கள். இரவை பகலாக்கும் இந்த தீபத் திருநாள் 3 நாள் கொண்டாடுப்படுகிறது.



கீதா–ராஜன்

### கார்த்திகை விளக்கின் தத்துவம்:

எண்ணெய் கரைகிறது, திரி கருகுகிறது. ஆம் தீபம் என்பது தன்னை கரைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு ஒளி வழங்குகிறது. பிறர் நலம் பேணுவதற்காக தான் உயிரையே தியாகம் செய்ய வேண்டும் என்பது கார்த்திகை தீபத் தத்துவம்.

### தீபம் ஏற்றும் முறை:

திருக்கார்த்திகை திருநாளில் கிழக்கு நோக்கி தீபம் ஏற்றினால் கஷ்டங்கள் விலகும். மேற்குத் திசை நோக்கி ஏற்றினால் கடன் தொல்லை நீங்கும். வடக்குத் திசை நோக்கி ஏற்றினால் திருமணத்தடை அகலும். எக்காரணம் கொண்டும் தெற்குத் திசை நோக்கி விளக்கு ஏற்றக்கூடாது.

தீபத்திருநாளன்று குறைந்தபட்சம் 27 தீபங்கள் ஏற்றவேண்டும். வீட்டு வாசலில் லட் சுமியின் அம்சமான குத்து விளக்கில் தீபம் ஏற்றுவது நல்லது. கார்த்திகை திருநாளன்று நெல் பொரியை நைவேத்தியமாக படைத்தால் சிவனருள் கிடைக்கும்.

| | |
|---|---|
| ஒரு முகம் ஏற்றினால் | நினைத்த செயல்கள் நடக்கும். |
| இரு முகம் ஏற்றினால் | குடும்பம் சிறக்கும். |
| மூன்று முகம் ஏற்றினால் | புத்திர தோஷம் நீங்கும். |
| நான்கு முகம் ஏற்றினால் | செல்வம் பெருகும். |
| ஐந்து முகம் ஏற்றினால் | சகல நன்மைகளும் உண்டாகும். |

இப்படியாக நாம் கார்த்திகை தீபத்தன்று விளக்கேற்றி நாம் மட்டும் நன்றாக வாழ வேண்டும் என்று வேண்டிக் கொள்ளாமல், இந்த உலகத்தில் உள்ள அனைத்து ஜீவ ராசிகளும் எந்தவித கஷ்டமும் இன்றி வாழ அந்த இறைவனை வேண்டிக் கொள்ளவேண்டும்.

விளக்கேற்றும் வேளையில் திருமகள் இல்லத்தில் உறைந் திருப்ப தாக ஐதீகம். விளக்கு வைப்ப தற்கு முன்பாக பெண்கள் தலைவாரி, தங் களை அழகு செய்து கொண்டு விளக்கேற்ற வேண்டும்.

திருவிளக்கில் துர்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய தெய்வ சக்திகள் உள்ளனர். தீப ஒளி தீய சிந்தனைகள் ஏற்படா வண்ணம் தடுக்கிறது. இதன் அடிப்பாகத்தில் பிரம்மா, தண்டு பாகத்தில் மஹாவிஷ்ணு, நெய், எண்ணெய் நிறையும் இடத்தில் சிவபெருமான் வாசம் செய்கின்றார்.

நம் வீட்டில் விளக்கேற்றி வழிபட்டால் தெய்வ சக்தி அதி கரிக்கும். வீட் டை தூய்மை படுத்தி விளக் கேற்ற அந்த மகாலட் சுமியே நம் வீட்டிற்குள் எழுந்தருள் வாள் என்பது ஐதீகம். தீபத்தின் சுடரில் மகாலட்சுமியும், ஒளியில் சரஸ்வதியும், வெப்பத்தில் பார்வதிதேவியும் எழுந்தருளுவதாக ஐதீகம். தீபம் ஏற்றி முப்பெரும் தேவியரின் திருவருளையும் ஒருங்கே பெறலாம்.






www.aanmeegamalar.com

# திருவண்ணாமலை மகாதீபக் கொப்பரை

## HISTORY




திருவண்ணாமலை அருள்மிகு அருணா சலேஸ்வரர் திருக்கோயிலுக்கு மஹா தீபம் ஏற்றும் கொப்பரைக்கு உள்ள சிறப்புகளைப் பார்ப்போம்.

கோவில் கருவறை எதிரில், பஞ்ச பூதங்கள், "ஏகன், அனேகன்" என்பதை விளக்கும் பரணி தீபமும், மாலை, ஆறு மணிக்கு, 2,668 அடி உயர மலை உச்சி யில், "அனேகன், ஏகன்" என்பதை விளக்கும், மஹா தீபமும் தீபத்திருவிழா நாளில் ஏற்றப்படும். இதற்காக, ஆறு அடி உயர இராட்சதக் கொப்பரை ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்பட்டு, மலை உச்சிக்கு அரோகரா முழக்கத்துடன் கொண்டு செல்லப்படும்.

இதில், ஏற்றப்படும் மஹா தீபத்தை, பல கி.மீ., வரை பார்க்க முடியும். கொப்பரை, வெப்பத்தால் சேதமாகாமல் இருக்க, மேல்பாகம் மூன்றே முக்கால் அடி, கீழ்பாகம் இரண்டே முக்கால் அடி சுற்றளவும், 300 கிலோ எடையில், கால் அங்குலம் தடிமன் கொண்டதாகவும், 20 வளையங்களுடன் கூடிய செப்புத் தகட்டில் செய்யப்படுகிறது.

கொப்பரைக்குக், காவி வர்ணம் பூசப்பட்டு, '"சிவ சிவ'" என்ற வாசகம் எழுதப்பட்டு, விபூதிப் பட்டையுடன் கூடிய லிங்கம், அர்த்தநாரீஸ்வரர் உருவத்தின் மேல், தீப விளக்கு எரிவது போலும், அதில், அர்த்தநாரீஸ்வரர் உருவாய் எழுவது போலவும் படம் வரையப்படும்.

முன்னதாக, இந்த கொப்பரை கோயிலுக்குக் கொண்டு வரப்பட்டு, சிறப்பு பூஜைகள் செய்வார்கள்.

இதுவரை திருவண்ணாமலை 2668 அடி உயரம் கொண்டதாக அறிவிக்கப்பட்டது, ஆனால் சமீபத்தில் தமிழக அரசு இதன் உயரம் 2787 அடிகள் என அறிவித்துள்ளது. இதன் உச்சியில்தான் பிரம்மாண்டமான கொப்பரையில் மகா தீபம் ஏற்றப்படுகிறது.

பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது இந்த தீப உற்சவம். மலைமேல் மகாதீபம் என்ற பெருமை இங்கு மட்டுமே உள்ளது. பின்னாட்களில் திருப்பரங்குன்றம் மலைமீது தீபம் ஏற்றும் வழக்கம் உண்டானது.

மகாதீபம் ஏற்றும் உரிமை செம்படவர் எனப்படும் மீனவர் இனத்தவருக்கு உரியது. மீனவர் தலைவரான பர்வதராஜன் என்பவனின் மகளாகப் பார்வதி தேவி பிறந்தார் . மீன் போன்ற அழகிய விழிகளை உடையவள் என்ற பொருளில் "கயல் கண்ணி" என்று பெயரிட்டனர்.

பலரும் "கயல் கன்னி" என்று குறிப்பிடுகின்றனர்; இது தவறு. "கயல் கண்ணி " என்பதே சரி. மீனாட்சி அம்மனுக்கு அங்கயற்கண்ணி, அதாவது அம் + கயல் + கண்ணி என்று ஒரு பெயர் உண்டு. இந்த கயல் கண்ணியினைச் சிவபெருமான், மீனவ இளைஞனாக வந்து, மணந்து, தேவியின் சாபம் நீக்கி, இருவரும் சிவ பார்வதியாக பருவதராஜனுக்குத் தரிசனம் தந்தனர். இதனால் மீனவர்களுக்குப் பருவதராஜகுலத்தார் என்று பெயர் ஏற்பட்டது. செம்படவர் என்ற பெயரும் இதே பொருளில்தான். படகுகளில் செல்வதால் படவர்; சிவன் + படவர் என்பதே செம்படவர் என்று ஆனது.

இந்த பருவதராஜகுலத்தார்தான் தலைமுறை தலைமுறையாக மகாதீபம் ஏற்றும் உரிமைகளை உடையவர்கள்.

தீபத் திருவிழாவின் பத்தாம் நாள் மாலையில் மலைமேல் ஏற்றுவதற்காக தீபக் கொப்பரை, மலைமீது முன்னதாகவே கொண்டு செல்லப்பட்டு வைக்கப்பட்டிருக்கும்.

தீபத் திருவிழாவில் தீபம் ஏற்றும் கொப்பரை பற்றியும் வரலாறு உண்டு.

ஆதி காலத்தில் இப்பகுதியை ஆண்ட மன்னர்கள் செய்து கொடுத்துள்ளனர். அது பற்றி தகவல் திரட்ட படவில்லை. 1668–ஆம் ஆண்டு, பல ஆண்டுகள் முன்பு வேங்கடபதி என்பவர் நாலரைபாகம் எடைகொண்ட இது எந்தவகை எடை என்று தெரியவில்லை வெண்கலத்தால் செய்யப்பட்ட கொப்பரை செய்து அளித்துள்ளார். கோயிலில் இது பற்றிய குறிப்பு பதிவாகி உள்ளது. இது, தொடர்ந்து நெடுங்காலம் பயன்படுத்தப்பட்டதால் சேதமடைந்தது.

இதையடுத்து, இப்போது உள்ள கொப்பரையின் வடிவமைப்பு உருவானது. இது 1990ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 92 கிலோ செம்பு 110 கிலோ இரும்புச் சட்டங்களால் வடிவமைக்கப்பட்டது. கொப்பரையில் அடிப்பாகம் 27 அங்குல விட்டமும் மேற்புறம் 37 அங்குல விட்டமும் உடையது.

தொகுப்பு: புனிதவேல்

தொடர்பு எண்: 9841807572




புனிதவேல்

# பழமையான திருக்கழுக்குன்றம் தாழம்பேடு கைலாசநாதர் திரிபுரசுந்தரி அம்மன் கோயில் புதுப்பிக்கப்படுமா?




திருக்கழுக்குன்றத்திலிருந்து செங்கல்பட்டு செல்லும் சாலையில் கீரப்பாக்கம் அருகில் பிரியும் சாலையில் 3 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது தாழம்பேடு கைலாசநாதர் கோயில்.

கீரப்பாக்கத்திலிருந்து தாழம்பேடு வரை உள்ள சாலை வனத்துறை வசம் உள்ளது. இருபுறமும் அடர்ந்த மரங்கள் உள்ளது. மயில்கள் மான்கள் வன உயிரினங்கள் நீங்கள் அந்த சாலையில் செல்கையில் சாதாரணமாக காணலாம்.



தாழம்பேடு ஊருக்குள் சென்ற பின் வயல்வெளி அருகில் அமைந்துள்ளது இந்த சிவன் கோயில். மிகவும் சிறிய கோயிலாக இந்த கோயில் அமைந்துள்ளது. இறைவன் பெயர் கைலாசநாதர் அம்மன் பெயர் திரிபுரசுந்தரி அம்மன். கோயிலின் முன்பு நந்தி உள்ளது. கோயிலுக்கு எதிரே பெரிய அரசமரம் அமைந்துள்ளது.





வேலன்

கோயிலுக்குஉள்நுழைகையில் வினாயகர் சிலை உள்ளது. சதுர வடிவ கருவறை..

இறைவனுக்கு அருகிலேயே அம்மன் சிலை அமைந்துள்ளது. வெளியிலிருந்து பார்க்கையில் அம்மன் சிலை தெரியவில்லை. அருகில் சென்று பார்த்தால் தான் நின்ற கோலத்தில் அம்மன் நமக்கு காட்சியளிக்கின்றார்.

கோயிலினை சுற்றி வருகையில் சிலைகள் எதுவும் காணப்படவில்லை. அந்த இடங்கள் காலியாக உள்ளன. சண்டிகேஸ்வரர் சன்னதி தனியாக உள்ளது. அதுபோல பைரவர் சன்னதியும் நந்திக்கு அருகில் பக்கவாட்டில் அமைந்துள்ளது. கோயிலுக்கான கிணறு உள்ளது.

ஒருநேரம் மட்டுமே பூஜை நடைபெறுகின்றது. கோயிலினை பற்றிய கல்வெட்டு தகவல் எதுவும் கிடைக்கில்லை. சிவராத்திரி மற்றும் பிரதோஷம் பூஜைகள் நடைபெறுகின்றன. கோயிலினை புதுப்பித்து பராமரித்தால் நன்றாக இருக்கும்.

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.




● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



# எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்



உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

aanmeegamalar@gmail.com

# தில்லை

## சிவத்தலம் மட்டும் அல்ல பழங்கால விண்வெளி ஆராய்ச்சி கூடமாக திகழும் ஒரு விஞ்ஞான ரகசியம்




– சென்ற இதழ் தொடர்ச்சி

### ஆறு கால பூசை

சிதம்பரம் நடராசருக்கு தினந்தோறும் ஆறு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆறு கால பூசையென்பது,

காலை சந்தி
இரண்டாங் காலம்
உச்சி காலம்
சாயங் காலம்
ரகசிய பூசை காலம்
அர்த்த சாமம்

### ஆண்டுக்கு ஆறு அபிசேகங்கள்

இந்து தொன்மவியல் கணக்கின் படி மனிதர்களது ஓர் ஆண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாளாகும். ஒரு நாளில் ஆறு கால பூசைகள் நடைபெறுவது போல தேவர்கள் செய்யும் பூசையாக ஆண்டுக்கு ஆறு பூசைகள் சிதம்பரம் கோவிலில் நடைபெறுகின்றன. அவை...

- சித்திரை மாதம், திருவோண நட்சத்திரத்தில் கனகசபையில் மாலையில் அபிசேகம்
- ஆனி மாதம், உத்திர நட்சத்திரத்தில் இராச சபையில் அதிகாலையில் அபிசேகம்
- ஆவணி மாதம், பூர்வ பட்ச சதுர்த்தசியில் கனக சபையில் மாலையில் அபிசேகம்
- புராட்டாசி மாதம், பூர்வ பட்ச சதுர்த்தசியில் கனக சபையில் மாலையில் அபிசேகம்
- மார்கழி மாதம், திருவாதிரை நட்சத்திரத்தில் இராச சபையில் அதிகாலையில் அபிசேகம்
- மாசி மாதம், பூர்வ பட்ச சதுர்த்தசியில்

கனகசபையில் மாலையில் அபிசேகம்

**சிதம்பரம் நாட்டியாஞ்சலி விழா**

நடனக்கலைகளின் தந்தையான சிவபெருமானின் நடனமாடும் தோற்றம் நடனராசன் எனப்படுகிறது. இது மருவி நடராசன் எனவும் அழைக்கப்படுகிறது. சிவபெருமானில் பலவகையான நடனங்களில் இத்தலத்தில் ஆனந்த தாண்டவம் நிகழ்கின்றது. சிதம்பரம் கோவிலில், நாட்டியாஞ்சலி என்ற நாட்டிய விழா ஒவ்வொரு வருடமும் நடைபெறுகிறது. இங்கு உலகில் பல்வேறு இடங்களில் நாட்டியம் பயிலும் கலைஞர்கள், தங்களுடைய நாட்டியத்தை அர்ப்பணமாக வழங்குகின்றனர். கலைஞர்கள் இங்கு வந்து நாட்டியார்ப்பணம் செய்வதை ஒரு பெருமையாக கருதுகின்றனர்.

**நூல்கள்**

தமிழகத்திலுள்ள கோவில்களில் அதிகமான நூல்களினாலும், பாடல்களினாலும் போற்றப்படுகின்ற கோவிலாக சிதம்பரம் நடராசர் கோவில் உள்ளது. இத்தலத்தினைப் பற்றி நாற்பத்தி மூன்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு.

| |
|---|
| தேவாரம் 11 திருப்பதிகங்கள் |
| திருவாசகம் 25 திருப்பதிகங்கள் |
| திருக்கோவையார் |
| திருமுறைக் கண்ட புராணம் |
| திருவிசைப்பா |
| திருபல்லாண்டு |
| திருமந்திரம் |
| கோவில் நான்மணிமாலை |
| கோவில் திருப்பண்ணியர் விருத்தம் |
| பெரியபுராணம் |
| சிதம்பரம் மணிக்கோவை |
| சிதம்பரச் செய்யுட் கோவை |
| சிவகாமி அம்மை இரட்டை மணிமாலை |
| தில்லைக்கலம்பகம் |
| தில்லையுலா |
| மூவரு லா |
| தில்லை யமகவந்தாரி |
| சிதம்பரவெண்பா |
| சிதம்பர சபாநாத புராணம் |
| பாண்டிய நாயக முருகன் பிள்ளைத் தமிழ் |
| புலியூர் வெண்பா |
| நடேசர் திருவருட்பா |
| நடராச திருவருட்பா |
| நடராசர் சதகம் |
| நடராசர் திருப்புகழ் |
| சிவகாமியம்மை பிள்ளைத் தமிழ் |
| சேக்கிழார் புராணம் |
| சிவகாமியம்மைப் பதிகம் |
| தில்லை கற்பக விநாயகர் வெண்பா அந்தாதி |
| தில்லை நவமணி மாலை |
| சிதம்பர விலாசம் |
| பரமரகசிய மாலை |
| திருவருட்பா |
| தில்லைத் திருவாயிரம் |
| புலியூர் புராணம் |
| சிதம்பரப் புராணம் |
| நடராசர் காவடிச்சிந்து |
| நடராசர் பத்து |
| நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள் |
| சிதம்பரம் பட்டியல் |
| முத்துத்தாண்டவர் கீர்த்தனைகள் |
| சிதம்பரம் சிவகாமியம்மை பஞ்சரத்தினம் |
| தில்லை பாதி நெல்லை பாதி |

**கோவில் அமைப்பு:**

நாற்பது ஏக்கர் பரப்பளவில், நான்கு திசைக்கென ஒரு கோபுரமாக நான்கு கோபுரங்களும், ஐந்து சபைகளும் உடையது இக்கோவில். இவ்வாலயத்தில் உள்ள கிழக்கு கோபுரத்தில் நூற்றியெட்டு பரதநாட்டிய நிலைகளில் உள்ள சிற்பங்களை காணலாம். மேலும் இங்கு மூலவர் சிலை இருக்கும் இடம் கனக சபை என்று அழைக்கப்படுகிறது. இந்த சபை, பராந்தக சோழ மன்னனால் பொற்கூரை வேயப்பட்டது. அதனால் இந்தச் சபை பொன்னம்பலம் என அழைக்கப்படுகிறது.

சோழ சாம்ராஜ்யத்தின் தலைநகரமாக விளங்கிய சிதம்பரத்தில் பத்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

கோபுரங்களின் அற்புதம் இந்த ஆலயத்தில் நான்கு கோபுரங்கள் உள்ளன. கிழக்கு கோபுரம் ஆடல் கலை



சிவத்திரு.குமரேசன்




யின் அனைத்து அம்சங்களையும் கொண்டுள்ளது. மற்றொரு கோபுரத்தில் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி, பராசக்தி, விநாயகர், முருகன், விஷ்ணு, தன்வந்திரி, இந்திரன், அக்னி, வாயு, குபேரன், புதன், நிருதி, காமன், பத்ரகாளி, துர்க்கை, கங்காதேவி, யமனாதேவி, ராகு, கேது, நாரதர், விசுவகர்மா, நாகதேவன், சுக்கிரன், லட்சுமி, வியாக்ரபாதர், அகத்தியர், திருமூலர், பதஞ்சலி ஆகியோர் சிலைகள் உள்ளன. சிவகங்கை தீர்த்த குளம் நான்கு புறமும் நல்ல படிக்கட்டுகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இது போன்று தமிழகத்தில் வேறு எந்த தலத்திலும் இல்லை. சிவகங்கை தீர்த்த குளம் அருகில் சிறு தூணை நட்டியுள்ளனர். அங்கியிருந்து பார்த்தால் 4 ராஜகோபுரங்களையும், ஒரு சேர தரிசனம் செய்ய முடியும்.

### தீர்த்தங்கள்

கோயிலில் சிவகங்கை, பரமானந்த கூபம், வியாக்கிரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகச்சேரி, பிரம தீர்த்தம், சிவப்பிரியை, புலிமேடு, குய்ய தீர்த்தம், திருப்பாற்கடல் ஆகிய தீர்த்தங்கள் அமைந்துள்ளன.

❖ பரமானந்த கூபம் நடராசர் கோயிலின் கிழக்கில் அமைந்துள்ளது.

❖ குய்யதீர்த்தம் நடராசர் கோயிலின் வடகிழக்கே கிள்ளைக்கு அருகே அமைந்துள்ளது.

❖ புலிமடு சிதம்பரம் கோயிலின் தென் பகுதியில் அமைந்துள்ளது.

❖ வியாக்கிரபாத தீர்த்தம் நடராசர் கோயிலுக்கு மேற்கில் இளமையாக்கினார் கோயிலுக்கு எதிரே அமைந்துள்ளது.

❖ அனந்த தீர்த்தம் நடராசர் கோயிலுக்கு மேற்கிலுள்ள திருவனந்தேச்சுரத்துக்கு கோயிலில் அமைந்துள்ளது.

❖ நாகச்சேரி அனந்தேச்சுரத்துக்கு மேற்கில் அமைந்துள்ளது.

❖ பிரமதீர்த்தம் நடராசர் கோயிலுக்கு வடமேற்கே இருக்கும் திருக்களாஞ்சேரி யில் கோயிலில் அமைந்துள்ளது.

❖ சிவப்பிரியை நடராசர் கோயி லுக்கு வடக்கே உள்ள பிரமசாமுண்டி கோயிலின் முன் அமைந்துள்ளது.

❖ திருப்பாற்கடல் சிவப்பிரியைக்கு தென் கிழக்கில் அமைந்துள்ளது.

### பொன்னால் வேயப்பட்ட கருவறை

சித்தர்கள் கண்டுபிடித்த மனித உடலின் தத்துவத்தின் படி இக்கோவில் கட்டப்பட்டுள்ளது. இக்கோவிலில் இருக்கும் 21,600 தங்க ஓடுகள் ஒரு நாளில் மனிதன் சுவாசிக்கும் மூச்சின் சரியான எண்ணிக்கையாகும். அக்கூரையில் அடிக்கப்பட்டிருக்கும் 72,000 ஆணிகள் மனித உடலில் ஓடும் 72,000 நாடி, நரம்புகளை குறிப்பதாகும். இக்கோவிலில் இருக்கும் 9 வாயில்கள் மனித உடலில் இருக்கும் 9 துவாரங்களை குறிக்கிறது. “சிவாயநம” எனும் 5 எழுத்துக்களை குறிக்கும் பொன்னம்பலத்தின் 5 படிகள், 64 கலைகளை குறிக்கும் 64

சாத்துமரங்கள், 96 தத்துவங்களை குறிக்கும் 96 ஜன்னனல்கள், 4 வேதங்கள், 6 சாஸ்திரங்கள், 5 பூதங்களை குறிக்கும் வகையில் இக்கோவிலின் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சிதம்பரம் நடராசர் கோயிலில் எட்டுத் திசைகளிலும் சாஸ்தாவின் எட்டு அவதாரங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. அந்த அவதாரங் கள் மகா சாஸ்தா, ஜகன்மோகன சாஸ்தா, பாலசாஸ்தா, கிராத சாஸ்தா, தர்மசாஸ்தா, விஷ்ணு சாஸ்தா, பிரம்ம சாஸ்தா, ருத்ர சாஸ்தா.

இறைவன் இத்தலத்தில், நடராசர் என்ற உருவமாகவும், ஆகாயம் என்ற அருவமாகவும், ஸ்படிக லிங்கம் என்ற அருவுருமாகவும் அருள் பாலிக்கிறார்.

முக்குறுணி விநாயகர், திருமுறை காட்டிய விநாயகர், பொல்லாப் பிள்ளையார், வல்லப கணபதி, மோகன கணபதி, கற்பக விநாயகர், நர்த்தன விநாயகர், திருமூல விநாயகர் என பல்வேறு விநாயகர் திருமுன்கள் இக்கோயிலில் அமைந்துள்ளன. சிதம்பரம் கோயிலுக்குள் திருமுறைகள் இருப்பதை இங்குள்ள பொல்லாப் பிள்ளையாரே கூறினார் என்ற சொல் உள்ளது.

சிதம்பரம் நடராசர் கோயிலுக்குள் பல்வேறு கோவில்கள் அமைந்துள்ளன. அம்பாள்சிவகாம சுந்தரி அம்மானாக எழுந்தருளியுள்ளார். மூன்றாவது பிரகாரத்தில் வடக்குப் பகுதி யில் சிவகாமசுந்தரி அம்மன் கோவில் அமைந் துள்ளது.

இச்சந்நதி அருகே யமன் மற்றும் சித்திரகுப்த னுக்கு சிலைகள் அமைந்துள்ளன. சிவகாம சுந்தரி கோயிலின் வடக்கே, பாண்டிய நாயகர் கோவில் அமைந்துள்ளது. இது முருகன் கோயிலாகும். இக்கோயிலில் ஆறுமுகம் கொண்ட முருகன், வள்ளி மற்றும் தேவசேனாவுடன் உள்ளார். நவகிரகங்களால் வழிபடப்பட்ட இலிங்கங்கள் உள்ள கோவிலாகும்.

மார்கழி மாதங்களில் “திருவெம்பாவை” பாடப் பட்டு சிவனுக்கு விசேச வழிபாடுகள் நடக்கின்றன. அம்மாதத்தில் வரும் திருவாதிரை தினம் வெகு சிறப்பாக இங்கு கொண்டாடப்படுகிறது. ஆனித்திருமஞ்சனம், மகாசிவராத்திரி போன்ற விஷேஷ தினங்களில் சிவபெருமானுக்கு சிறப்பு பூசைகள் நடைபெறுகின்றன.

சிதம்பர நடராசரை வழிபட்டால் முக்தி உறுதி என்பது சிவனடியார்களின் கருத்தாகும். மேலும் மனதில் எத்தகைய கோரிக்கைகள் மற்றும் வேண்டுதல்களோடு இங்கு வந்து சிவபெரு மானை மனமுருகி வழிபடுவதால் அவை நிச்சயம் நிறைவேறும் என கூறுகிறார்கள். நாட்டிய கலையில் சாதிக்க விரும்புபவர்கள் அதிகம்




வந்து வழிபடும் கோவிலாக சிதம்பரம் நடராசர் கோவில் இருக்கிறது.

ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த ஸ்ரீசக்ரம் அம்மன் திருமுன்னில் உள்ளது. அர்த்தஜாம பூசை இத்தலத்தின் தனி சிறப்பு. அர்த்தஜாம பூசையில் உலகில் உள்ள அனைத்து தெய்வங்களும் கலந்து கொள்வதாக ஐதீகம். இதை அப்பர் புலியூர் (சிதம்பரம்) சிற்றம்பலமே புக்கார் தாமே எனப்பாடுகிறார். சேக்கிழார் இங்குள்ள ஆயிரங் கால் மண்டபத்தில் தான் பெரியபுராணம் பாடி அரங்கேற்றினார். அருணகிரிநாதர் இத்தலத்தில் உள்ள முருகப்பெருமானை தனது திருப்புகழில் பாடியுள்ளார்.

### அபிஷேக ஆராதனைகள்

தமிழ்நாட்டில் எந்த ஒரு சிவாலயத்திலும் பார்க்க முடியாதபடி சிதம்பரம் கோவிலில் மட்டுமே அரிய வகை வித்தியாசமான சிவ வடிவங்களைப் பார்க்க முடியும். சிதம்பரம் நடராசரை எல்லா கடவுள்களும் வந்து வழிபட்டு பேறு பெற்றனர். இதை உணர்த்தும் வகையில் நடராசர் கோவில் முழுவதும் ஏராளமான திருமுன்கள் உள்ளன.

நடராசர் கோவிலுக்குள் தினமும் 27இலிங் கங்களுக்கு அபிசேக ஆராதனைகள் நடத்தப் படுகின்றன. இது தவிர ஏராளமான லிங்கங்கள் உள்ளன. சிதம்பரம் நடராசர் கோயிலில் உள்ள சிவகங்கை தீர்த்தக்கரையில் திருத்தொண்டத் தொகையீச்சரம் என்ற பெயரில் ஒன்பது லிங்கங் கள் உள்ளன. இந்த இலிங்கங்களை ஒன்பது தொகையடியார்களாக எண்ணி வழிபடுகின்றனர்.

சிற்சபை (சிற்றம்பலம்) நடராசப் பெருமான் திரு நடனம் புரிந்தருளும் இடமாகும். முதலாம் ஆதித்த சோழனுடைய மகன் முதல் பராந்தக சோழன் இச்சிற்றம்பலத்திற்கு பொன் வேய்ந்தான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் "லெய்டன்"

நகரப் பெரிய செப்பேடுகளும் கூறுகின்றன.

கனகசபை (பொன்னம்பலம்) சிற்றம்பலத்திற்கு முன் அமைந்துள்ளது. இங்கு ஸ்படிக இலிங்கத்திற்கு நாள்தோறும் ஆறு கால பூசை நடைபெறுகிறது. இப்பொன்னம்பலத்தின் முகட்டை, முதலாம் ஆதித்த சோழன், கொங்கு நாட்டிலிருந்து கொண்டுவந்து உயர்ந்த மாற்றுடைய பொன்னால் வேய்ந்தான் என்று தெய்வச் சேக்கிழார் "இடங்கழி நாயனார்" வரலாற்றில் கூறுகின்றார். தில்லைக் கோவில் கல்வெட்டுப்பாடலொன்று சிறந்த சிவபக்தனும், படைத்தலைவனுமான மணவில் கூத்தனான காளிங்கராயன் என்பவன் இப்பொன்னம்பலத்தைப் பொன்னால் வேய்ந்தான் என்று கூறுகின்றது.

இராசசபை என்பது ஆயிரங்கால் மண்டபம். ஆண்டுதோறும் ஆனி, மார்கழி மாதங்களில் நடைபெறும் ஒன்பதாம் நாள் திருவிழாக்களில் நடராசப் பெருமான் இரவில் இம்மண்டபத்தில் எழுந்தருளி மறுநாள் காலை பக்தர்களுக்கு தரிசனம் தருவார்.

தேவசபைபேரம்பலம்என்று அழைக்கப்படுகிறது. இதன் விமானம் செம்பினால் செய்யப்பட்டுள்ளது.

நிருத்தசபை நடராசப் பெருமானின் கொடிமரத்திற்குத் தென்புறம் மிகவும் அற்புதமான வேலைப் பாடுகளுடன் அமைந்துள்ளது. ஊர்த்துவ பெருமானின் திருமேனி இங்கு உள்ளது.

மூன்றாம் பிரகாரத்தில் சிவகங்கை திருக்குளத்திற்கு மேற்கே அம்பிகை சிவகாமசுந்தரியின் திருமுன் ஒரு தனிக்கோவிலாக பிரகாரத்துடன் அமைந்து விளங்குகிறது. கோவிலின் வடமேற்குத் திசையில் அம்பிகை சிவகாமசுந்தரி கோவிலை ஒட்டியும், வடக்கு கோபுரத்தை ஒட்டியும் முருகன் கோவில் அமைந்து விளங்குகிறது. ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வயானை இருபக்கமும் நிற்க மயிலின் மீது எழுந்தருளி காட்சி தருகிறார். முருகனின் திரு உருவம் ஒரே கல்லினால் அமைந்ததாகும்.

சைவ, வைணவ சமய ஒற்றுமைக்கு சிதம்பரம் கோவில் ஒரு எடுத்துக்காட்டாக திகழ்கிறது. 108 வைணவ திவ்யதேசங்களில் ஒன்றான திருசித்திரக்கூடம் என்று அழைக்கப்படும் கோவிந்தராஜப் பெருமாள் கோவில் தில்லை சிதம்பரம் கோவிலின் உள்ளே அமைந்திருக்கிறது. நடராசப் பெருமானின் திருமுன்னுக்கு நேர் எதிரே நின்றுகொண்டு நடராசரை தரிசனம் செய்தபிறகு இடதுபுறம் திரும்பி நின்றால் கோவிந்தராஜப் பெருமாள் திருமுன் காணலாம். இரண்டு திருமுன்களும் அருகருகே அமைந்திருப்பது தில்லை கோவிலின் சிறப்பாகும்.


ஒட்டு மொத்தத்தில் சிதம்பரம் நடராசர் கோவில் என்பது சிவத்தலம் மட்டும் அல்ல பழங்கால விண்வெளி ஆராய்ச்சி கூடமாக உலகத்தின் தோற்றத்தை சொல்லி, உலகத்திற்கும் தனிப்பட்ட மனிதருக்கும் உள்ள ஒற்றுமையை விளக்கும், அறிவியலுடைய எல்லை ஆன்மிகம் என்றும். இன்னும் பலகோடி ஆண்டுகளுக்கு சொல்லும் ஒரு விஞ்ஞான ரகசியம்.


– சிவத்திரு.குமரேசன் இராஜசிம்மன்
உதவிப் பேராசிரியர்
SRM கலை மற்றும் அறிவியல் கல்லூரி
919003296221 easanaithedi.in



aanmeegamalar.com வழங்கும்

# தினம் ஒரு திருக்குறள்



ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் தினமும் ஒரு திருக்குறளை வாட்சப்பில் பெற விரும்புபவர்கள் 9444228203 என்ற வாட்சப் எண்ணிற்கு Thirukkural என டைப் செய்து அனுப்பிவையுங்கள்.

aanmeegamalar.com - whatsapp குருப்பில் இணைந்து தினமும் ஒரு அழகிய வடிவமைப்புடன் கூடிய திருக்குறளை பெறுங்கள்





# பரமக்குடியில் அடர் மூலிகை வனக் கோவில்

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில், பல்வேறு தெய்வீக மூலிகைகளை சேகரித்து பொதுமக்களுக்கு சித்தமருத்துவம் செய்து வந்த தம்பதியான சங்கர் சாரதா இவருடைய மகன் அரசு பதிவு பெற்றசித்த மருத்துவர் டாக்டர் வரதராஜன். 25,000க்கும் மேற்பட்ட உயிர் காக்கும் மூலிகை மரங்களை பாதுகாத்து வளர்த்து வருகிறார்.

இதில் சிவ அம்சமாக கருதப்படும் மகா வில்லம், வன்னி மரம், வில்வம் போன்றவை குறிப்பிடத்தக்கது.

பரமகுடியில் அபய வரத ஆஞ்சநேயர் கோவிலை கட்டி கும்பபாபிஷேகம் செய்துள்ளார் அடர் மூலிகை வனத்தில் பக்தர்கள் மூலிகை ஆர்வலர்கள் சித்த மருத்துவ பயிற்றுனர்கள் சாமி தரிசனம் செய்ய நர்த்தன விநாயகர், மகா சித்தர் அகத்தியர், ஔவையார் பாட்டி ஆகியோர்க்கு பீடமும் அஷ்ட லெட்சுமிகளுக்கும் தனிக்கோவில், விநாயகர், அகத்தியர், விவேகானந்தர், வள்ளளார்

www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com





அழகுராஜா

ஆகியோர்க்கும் தனி தனி கோவிலாக கட்டியுள்ளார்.

பொதுமக்கள்இயற்கையோடு சேர்ந்து இறைவனைவழிபடும் வகையில் இக்கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளதால், ஏராளமானோர் சாமி தரிசனம் செய்து செல்லுகின்றனர்.

அடர் வளர் மூலிகை வனத்தை உருவாக்கிய வரதராஜன் சித்த மருந்துகள் தயாரிப்பதில் திறமை பெற்றவர் இவரை பாராட்டி செவாலியர் விருதும் முன்று முறை ராமநாதபுரம் மாவட்ட கலெக்டரிடம் சான்றிதழ்மும் கேடயமும் பெற்றுள்ளார்.

அடர் மூலிகை வனத்தை பார்வையிடும் மூலிகை ஆர்வலர்கள் பள்ளி மாணவ மாணவிகளுக்கு மூலிகை மற்றும் மரக்கன்றுகளை இலவசமாக வழங்கியும் மர வளர்ப்பை ஊக்குவித்து வருகிறார் மானாமதுரை பரமக்குடி சாலையில் உயிர் காக்கும் சாரதா சங்கர் அடர் மூலிகை வனக்கோவிலை தரிசிக்கவும் மூலிகை கன்றுகளை பெறவும் கீழ்கண்ட செல் நம்பர் 9842045587 தொடர்பு கொண்டு பக்தர்கள் பயன் அடையலாம்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182




# விஞ்ஞானமே வியக்கும் புரியாத புதிர்கள்




- திருச்செந்தூர் சூரசம்ஹாரத்துக்காக சக்தி கொடுத்த வேலை எடுத்து வரும் போது கருடன் பறக்குது.
- சபரிமலைல திருவாபரணப் பெட்டி மலை ஏறும் போதும் கருடன் பறக்குது.
- பழனி சூரசம்ஹாரத்துல வேல் மலையில் இருந்து கீழே இறங்கும் போது மழை வருகின்றது.
- தஞ்சாவூர் பிரகதீஷ்வரர் ஆலய கும்பாபிஷேகத்துலயும் கூட கும்ப அபிஷேகம் நடக்கும் போது கருடன் வட்டமிட்டது.
- மைசூர் தசராவில் சாமுண்டீஸ்வரி உலா வரும் தினம் கண்டிப்பாக மழை பெய்யும்.
- திருக்கழுகுன்றத்திலும் பூஜையின் போது கருடன் வரும்.
- சித்திரை மாதம் அழகர் ஆற்றில் இறங்கும் போது மழை வருகிறது.
- கோயில் கும்பாபிஷேகம் நடக்கும்போதும் கருடன் வரும்.
- சரியான முறையில் உச்சாடனம் செய்து கும்பாபிஷேகம் செய்யும் பல ஊர்களில் கருடன் மேலே பறக்கிறது, அது சின்ன கிராமமாக இருந்தாலும்!
- இவை மட்டுமல்ல இன்னும் பல அதிசய நிகழ்வுகள் நமது இந்து மதத்தில் மட்டுமே உண்டு.




# கீதாசமையல்

சமையலுக்கு புதியவரா? சுவையான சமையல் சமைக்க விரும்புகிறீர்களா? கவலையே வேண்டாம்,

கீதாசமையல் YouTube சேனலை பாருங்கள் புதிய மற்றும் பாரம்பரிய சமையல் குறிப்புகளை அறிந்து கொண்டு வீட்டிலேயே சுவையான சமையலை செய்து மகிழுங்கள்




ஓட்டல் சுவையில் புதிய உணவுகளை சமைக்க தொடர்ந்து நமது YouTube சேனலை பாருங்கள்

பாரம்பரியமான சமையல் குறிப்புகளை மிக எளிதாக, தெளிவாக அறிந்து கொள்ள (geetha samayal) youtube சேனலை பாருங்கள்

YouTube LIKE & SHARE

# பேரின்பத்தை அடைய நினைப்பவர்கள் தற்காலிகமான சுகங்களில் கவனம் செலுத்தவது கிடையாது

**கடவுள் உருவாக்கிய மதம்**

அறிவும், அறியாமையும் வெவ்வேறு விதமாக விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. அவைகள் வெவ்வேறு எல்லைகளை கொண்டது. அறியாமையில் உள்ளபவர்கள் தங்களை உயர்ந்தவர்களாகவும், சகலத்தையும், கற்றுணர்ந்த அறிவாளிகளாகவும், எண்ணிக் கொள்கிறார்கள். குருடனால் வழி நடத்தப்படும் குருடனைப்போல் மூடர்கள் வளைவுகள் மிக்க பாதையில் நடந்து செல்கிறார்கள். கடைசியில் அவர்கள் ஒருவரையொருவர் மோதிக்கொள்வதை தவிர வேறு வழியை அறியாமல் இருக்கிறார்கள்.

குறுகிய மனம் படைத்த எதிலும் கவனம் இல்லாத தவறான வழியில் இழுத்து செல்லப்படுபவர்களுக்கு பூமியில் காணும் சுகங்கள் மட்டுமே நிரந்தரமானதாக தெரிகிறது. அவர்களுக்கு இன்னொரு உலகத்தை பற்றி எதுவும் தெரியாது. தாங்கள் மட்டுமே தங்களால் அறிந்தவைகள் மட்டுமே உண்மையானது, சத்தியமானது என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிபட்டவர்கள்மீண்டும் மீண்டும் என்னிடத்திலேயே வந்து பலமுறை பூமியில் ஜனனம் எடுத்து வாழ்ந்து மடிகிறார்கள்.

இறுதியான பேரின்பத்தை அடைய நினைப்பவர்கள் தற்காலிகமான சுகங்களில் கவனம் செலுத்தவதுகிடையாது. எதை பலரால் கேட்கமுடியவில்லையோ எதை கேட்டாலும் பலரால் அறிய முடியவில்லையோ அதை விரும்புவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். கேட்க முடியாத பொருள் என்றால் என்ன? என்பதை நாம் சற்று சிந்தித்தால் இந்த வாசகத்தின் பொருள் என்னவென்று நமக்கு நன்றாக தெரிந்துவிடும்.

இந்த உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் மனிதன் உட்பட எல்லா ஜீவனுமே உயிராற்றலால் தான் இயங்குகின்றன. அந்த உயிராற்றல் என்பது எது? அது நமது உடலில் எந்த பகுதியில்



இருக்கிறது. தலையில் மூளை, மார்பில் இதயம், வயிற்றில் குடல் இருப்பது நமக்கு நன்றாக தெரியும். ஆனால் நம் உயிர் நமது உடம்பில் எதில் இருக்கிறது? எப்படி இருக்கிறது? உயிருக்கு நிறம் உண்டா பருமன் உண்டா அல்லது எதுவும் இல்லாத காற்றா? வெளிச்சமா? சப்தமா? என்று நாம் என்றேனும் சிந்தனை செய்து பார்த்து இருக்கின்றோமா?



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

விஞ்ஞானம் உயிரை துடிப்பு அதாவது சலனம் என்கிறது. மெய்ஞானம் உயிரை சப்தம் என்கிறது. அதாவது பிரபஞ்சத்தில் உள்ள ஒலி அலைகள் நமது சரீரத்திற்குள் உயிராக உறைந்து கிடக்கிறது என்று கூறுகிறது. அதனால் தான் உயிர்களின் தலைவனான இறைவனை நாத விந்து என்று அழைக்கிறார்கள்.

நாதம் தான் உயிர் அந்த நாத ஒலியை கேட்பது தான் அல்லது கேட்க முயற்சிப்பது தான் வாழ்க்கையின் அர்த்தம் என்று கடோபனிஷதம் தெளிவாக கூறுகிறது. கேட்காத ஒலியை கேட்டு புரிந்து கொள்வது தான் நிரந்தரமான இன்பத்தை அறிந்து கொள்வதற்கு அனுபவித்துக் கொள்வதற்கு வழி என்றும், இந்த உபநிஷதம் கூறுவது தான் இந்து மதத்தின் ஆதார கருத் தாகும்.

உயிரை அறிவது என்பது முதன்மையான கடவுளை காணுதக்கறிய பரம்பொருளை ஆத்மாவின் அடி ஆழத்தில் மறைந்து கிடப்பதை இதயக் குகையில் ஒளிவீசிக் கொண்டிருப்பதை மதி நுட்பத்துடன்கடின சிரத்தையுடன் தொடர்ச் சியாக முயற்சிப்பது ஒரே வழி. இந்த முயற்சிக்கான தகு தியை ஆன்மஒளி பெற்ற ஒரு குரு விடமிருந்து கேட்டறியப்பட வேண்டும்.




ஆனந்தம் நிறைந்ததும் நுட்ப மானதுமாகிய ஆத் மாவை பிரித்து உணர்கிறவன் ஆனந்த ஊற்றை கண்டு அடைந்தவன் ஆகிறான்.

இத்தகைய ஆனந்த ஊற்றை கண்டு அடைவதற்கு என்ன வழி என்றால் பிரணவ மந்திரத்தை இடை விடாது பற்றிக்கொள்வதே ஆகும். ஏனென்றால் ஓம் என்ற பிரணவ மந்திரமே இறைவனாகும். இதுவே பிரபஞ்சத்தின் கடைசி எல்லையாகும். இம்மந்திரத்தை அதன் நுட்பத்தை அதன் ரகசியத்தை அறிந்தவன் எல்லாவற்றையும், அறிந்தவனாகிறான். ஓம் என்ற பிரணவம் தான் மிக உயர்ந்த ஆதாரம் என்பதற்கு இதை விட வேறு ஆதாரங்களை தர இயலாது. மனிதனின் அல்லது ஜீவனின் நாபியில் உறைந்திருக்கும் ஓம் என்ற பிரணவமே அண்டவெளி எங்கும் பரந்து கிடக்கிறது.

நமது ஐம்புலன்களை விட பொருட்கள் வலிமை பெற்றது. பொருட்களை விட மனம் வலுவானது. மனதை விட புத்தி மதிப்புமிக்கது. புத்தியை விட ஆத்மா மகோன்னதமான உயர்வானது. எனவே ஆத்மாவை அறிவது தான் இறைவனை அறிதலாகும். இறைவனை அறிந்த பிறகு பிறப்பு என்பது இல்லை. ஆகவே பகுத்தறிவு படைத்த மனிதர்கள் புறப்பொருட்கள் மீது உள்ள பற்றுதலை விட்டு விட்டு அகப்பொருளான ஆண்டவனிடம் நாட்டம் கொள்வதே சிறந்ததாகும். கண்ணுக்கு தெரிகின்ற காட்சிகள் மட்டும் தான் நம்பக்கூடியது. என்று கருதுபவன் வாழ்க்கை பயணத்தை முழுமையாக முடிக்க முடியாமல் பாதியிலேயே நிறுத்தி மீண்டும் ஆரம்பத்திலிருந்து துவக்கக்கூடிய மதியற்றவனாக இருக்கிறான்.

எனவே உள்ளுக்குள் அதாவது நமக்குள் நமது ஆராய்ச்சியை ஆளப்படுத்துவதே நம்மை மேம் படுத்திக் கொள்ளும் வழியாகும். அதை விடுத்து




அற்ப காரியங்களில் மனதை செலுத்துவது மூடத்தனமாகும்.

இன்று பலர் மதவாதிகளால் சொல்லப்படுகின்ற கடவுள் என்ற கருத்து புலன் உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டதாக அதாவது கட்புல னாகாத விஷயமாக இருக்கிறது. அதனால் அது நம்பத்தகுந்தது அல்ல என்று வாதிடுவார்கள். அவர்களுக்கு சரியான பதிலை கடோபஷத்தம் தருகிறது.

இறைவனுடைய உருவம் கண்ணால்காணும் எல்லைகளுக்குள் அடங்குவது இல்லை. எல்லோரா லும் அவரை சாதாரண கண்களால் காணமுடிவது கிடையாது. அவர் இதயத்தால் சிந்தனையால், மனதால் ஆத்மாவால் மட்டுமே அறியப்படுபவராக இருக்கிறார். அவரை அந்த நிலையில் அறிந்தவர்கள் பெருநிலையைஅடைகிறார்கள்.

மன ஆற்றல்கள் எல்லாவற்றையும், ஒருமுகப் படுத்தி இறைவன் காண முயற்சிக்க வேண்டும். அதாவது நாலாதிசையிலும் சதா சர்வ காலமும் ஓடிக்கொண்டிருக்கின்ற நம் மனக்கதியை அடக்கி ஒரே வழியில் நேர்வழி யில் ஓட்டப்பழக வேண்டும். அப்படி நாம் தொடர்ச்சியாக மனக்குதிரையை ஓட்டினால் கல்லும் முள்ளுமாக கரடுமுரடாக கிடக்கின்ற நமது இதயம் மென்மையானதாக தூயதாக மாறிவிடும்.

அப்படி மாறும் பொழுது கடவுள் காட்சி இயற்கையாக தோன்றும். இறைவனை நாம் நமது இதயத்தில் பரிபூரண அழகோடு கண்டு களிக்கலாம். இப்படி கண்டுகளிக்கும் மனப் பயிற்சியின் உள்ளத்தை உள்ளுக்குள் இழுக்கும் முயற்சி என்று சொல்லலாம். இந்த முயற்சி தான் ஏகாந்த பெருவழியை நிரந்தரமாக தரிசனம் செய்ய வழி வகுக்கும். அதாவது கடவுள் என்ற கருத்தமைவு நம்முடைய மனம் சார்ந்த இயல்பினை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்படுகிறது. அதனால் தான் இம்முயற்சிகள் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொருவிதமாக அமைகிறது.

பலரும் பலவழிகளை மேற்கொள் வதனால் தான் ஆத்ம பயணம் சிக்கலுடையதாகவும், குழப்பமுடைய தாகவும், தெரிகிறது. இதில் எதை எடுத் துக் கொள்வது எதை விடுத்து செல்வது என்று பல சாதகர்கள் ஆரம்ப நிலையில் குழப்பமடைகிறார்கள். நன்கு ஆழ்ந்து சிந்தித்து பார்த்தால் அந்த வழிகள் எல்லாமே சரியானதாகவும், சத்தியமானதாகவும், தெரியும். அந்த வழியில் தான் நாம் செல்லவேண்டும் என்பதும் கிடையாது. நமக்கு நாமே ஒரு புதிய பாதையை ஏற்படுத்திக் கொள்ளலாம். அந்த பாதை நிச்சயமாக இறைதரிசனத்தை நமக்கு பெற்றுத்தருமே அல்லாது நம்மை நிர்கதியாக விட்டுவிடாது. எது பாதை என்பது முக்கியமல்ல. எப்படி நாம் உழைக்கிறோம் என்பது தான் முக்கியம்.

கடோபநிஷதம் முழுவதுமே இறப்பிற்கு பிறகு ஆத்மாவின் தகுதி பயணத்தை பற்றியும், மீண்டும் பிறவாத நிலை பற்றியும், விரிவாக பேசப்படுகிறது. அத்தோடு சாதாரண மனிதன் கூட இறைவனை அடைவதற்கு வழிவகை சொல் லப்படுகிறது. எனவே கடோபநிஷதம் ஒன்றை ஆழமாக பார்த்தாலே மற்றைய அனைத்து உபநிஷதங் களையும் தெளிவாக பார்த்தது போல் ஆகிவிடும்

அதனால் தான் இந்த ஒரு உபநிஷத்தைப் பற்றி சற்று விளக்கமாக சொன்னேன். முழுமையாக அதை அறிந்துகொள்ள விரும்புவர்கள் அந்த உபநிஷத்தை படிப்பது நல்லது. இந்த மதம் என்பது எத்தகைய அறிவு பூர்வனமானது என்பதை சுட்டிக்காட்டவே வேதங்களைப் பற்றியும் உபநிஷதங்களை பற்றியும் இங்கே ஓரளவு சொன்னேன். ஆனால் இத்தோடு இந்து மதத்தின் அறிவு ஆதாரங்கள் நின்றுவிடவில்லை. இவைகளை அடிப்படையாக கொண்டு இன்னும் ஆழமாக பல்வேறு சமயப்பிரிவுகளாக நமது மதம் பரவிக்கிடக்கிறது. அவற்றையெல்லாம் நாம் இனி வரும் அத்யாயங்களில் தொடர்ச்சியாக சிந்தித்தாலே நமது சமய பண்பாடு எவ்வளவு அறிவு பூர்வமானது அனுபவ பூர்வமானது என்பதை தெரிந்து கொள்ளலாம்.



**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**

மேலும் தொடர்பு கொள்ளவும்

**போன்: 09442426434**












# நொய்டாவில் கந்த சஷ்டி விழா

## சிறப்பாக கொண்டாடிய வேதப் பிரச்சாரர் சன்ஸ்தான் அமைப்பினர்

கந்த சஷ்டியை முன்னிட்டு, நொய்டா, செக்டார் 62, ஸ்ரீ விநாயக மற்றும் ஸ்ரீ கார்த்திகேயர் கோவிலில், ஆறு நாட்களும் ஸ்ரீ கார்த்திகேய பகவானுக்கு சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டன.

கந்த சஷ்டி தினமான நவம்பர் 10ஆம் தேதி புதன்கிழமை ஸ்ரீ கார்த்திகேய பகவான் பல்வேறு மலர்களால் அலங்கரிக்கப்பட்டார். பக்தர்கள் கந்த சஷ்டி கவசம், கந்தர் அனுபூதி மற்றும் ‘முருகனின் மறு பெயர் அழகு’ உள்ளிட்ட பிரபலமான பக்தி பாடல்களை பாடியதை காண முடிந்தது.

கோவில் வளாகத்திற்குள் 'காவடி'களும் எடுக்கப்பட்டன. சஷ்டி விரத நாட்களில் முருகனுக்கு சிறப்பு அலங்காரங்கள் மற்றும் சிறப்பு









அபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற்றன.

தமிழகத்தில் உள்ள 'அறுபடை முருகன் கோவில்களில்' செய்யப்படு வதைப் போல நொய்டா கார்த்திகேயர் கோவிலும் செய்யப்பட்டன.

தைல எண்ணெய், திரவிய பொடி, மா பொடி, மஞ்சள், பஞ்சமிருதம், பால், தயிர், தேன், பழச்சாறுகள், நெய், விபூதி, சந்தனம் ஆகியவற்றால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது.

ஒவ்வொரு நாளும், கோவில் அர்ச்சகர்: ஸ்ரீ மணிகண்டன் சர்மா முருகனுக்கு சிறப்பு அலங்காரம் ஆராதனை செய்தார்.

விஎஸ்எஸ் பஜனை மண்டலி மகளிர் குழுவின் சார்பில் திருப் புகழ் பஜனைகளை நவ., 7 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இந்தவிழாவில் பல்வேறு துறை களைச் சேர்ந்த இசை ஆர்வலர்கள் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்தும் பலர் கலந்து கொண்டனர்.

பத்து டிகிரி வெப்பநிலையுடன் கூடிய கடுமையான குளிர்காலத்தை கூட பொருட் படுத்தால் ஏராளமான பக்தர்கள், காலையில் கோவிலுக்கு வந்து முருகனை வழிபட்டனர்.

நொய்டாவில் வசிக்கும், தென்னிந்திய மக்களால் தொடங்கப்பட்ட வேத பிரசார் சன்ஸ்தான் (VPS), 30 ஆண்டுகளுக்கும் மேலாக பக்தர்களுக்கு சேவை செய்து வருகிறது. ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோயில், 1000 சதுர மீட்டர் நிலப்பரப்பில் வேகமாக வளர்ந்து வரும் செக்டார் 62 இல், மேலும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருக்கோயில், செக்டார் 22, நொய்டா. ஆகிய கோவில்களை VPS நிர்வகிக்கிறது.


எஸ்.வெங்கடேசன்

– எஸ்.வெங்கடேசன், நொய்டா

தொடர்பு எண் போன்: 9811161370

# எச்சரிக்கையாய் இருங்கள்
# அச்சமுறாதீர்கள்



குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: “நோய்க்கு அஞ்சாதவர் எவருமே இல்லை எனலாம். வேதனையிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கான ஓர் எச்சரிக்கை சாதனமாக அச்சம் கொடுக்கப்பட்டது. அதை வளர்த்து, தவறாகப் பயன்படுத்துவது இதன் நோக்கமல்ல. அளவிற்கு மீறி அச்சத்திற்கு இடம் கொடுப்பது, கஷ்டங்களைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை முடக்கிவிட மட்டுமே செய்கிறது. சரியான திட்ட உணவின் அடிப்படைக் கோட்பாடுகளைத் தெரிந்து கொண்டு, “நான் அந்தப் பலகாரத்தை உண்ணமாட்டேன், ஏனெனில் அது எனக்கு நல்லதல்ல,” என நீங்கள் விவேகத்துடன் இருந்தால், அத்தகைய எச்சரிக்கையுடன்கூடிய அச்சம் அறிவுடைமையாகும். ஆனால் விவேகமற்ற அச்சம், நோய் ஏற்படுவதற்கு ஒரு காரணமாகிவிடும்; அதுவே அனைத்து நோய்களுக்கும் உண்மையான கிருமி. நோயைப்பற்றிய அச்சம், நோயைத் துரிதப்படுத்துகிறது. நோயைப்பற்றிய அந்த எண்ணத்தின் மூலமாகவே நீங்கள் உங்களுக்கு நோயை ஏற்படுத்திக்கொள்கிறீர்கள். ஜலதோஷம் பிடித்துவிடுமோ என தொடர்ந்து நீங்கள் அச்சப்பட்டுக்கொண்டிருந்தால், அதைத் தடுப்பதற்கு நீங்கள் எதைச் செய்தாலும் சரி, அதற்கு மிகவும் எளிதில் ஆளாவீர்கள். உங்கள் மனோசக்தியையும், நரம்புகளையும் அச்சத்தால் முடக்கிவிடாதீர்கள். உங்கள் மனோதிடத்தையும் பொருட்படுத்தாது. கவலை நிலைத்திருக்குமானால், நீங்கள் அஞ்சுகின்ற அதே அனுபவம் ஏற்படுவதற்கு உதவுகிறீர்கள். தவிரவும், நமது சொந்த மற்றும் பிறருடைய நோய்களையும், பலவீனங்களையும் பற்றி எப்பொழுதும் விவாதிக்கும் மனிதர்களுடன் தேவைக்கு அதிகமாக சகவாசம் வைத்துகொள்வதும் பரிவு காட்டுவதும் அறிவுடைமையாகாது. இப்பொருள் பற்றிய தொடர்ந்த உரையாடல், உங்கள் மனதில் பயத்தின் விதைகளை விதைக்க நேரிடலாம். காசநோய், புற்றுநோய், இதயக்கோளாறு ஆகியவற்றிற்கு பலியாகிவிடுவோம் என்று கவலைப்படுபவர்கள், தாங்கள் விரும்பாத விளைவு ஏற்படாதிருக்க, இந்த அச்சத்ததை நீக்கிவிடவேண்டும். ஏற்கனவே நோய்வாய்ப்பட்டும், பலவீனம் அடைந்தும் உள்ளவர்களிடத்தில் நம்பிக்கையூட்டும் எண்ணங்களையும் உணர்வுகளையும் ஊக்குவிக்கவேண்டும்; இதற்கென வலிமையும் ஆக்கபூர்வமான இயல்பையும் பெற்றுள்ளவர்களின் மத்தியில் அவர்களுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு இனிமையான சூழலை ஏற்படுத்துவது அவசியமாகும். எண்ணத்திற்கு பெருமளவு சக்தியுண்டு. ஆகவேதான் மருத்துவமனைகளில் பணிபுரிவோர், அவர்களுடைய தன்னம்பிக்கையான மனோநிலை காரணமாக அரிதாகவே நோய்வாய்ப்படுகின்றனர். ஏனெனில் அவர்களுடைய வலிமையான எண்ணங்களாலும், சக்தியாலும் அவர்கள் பலமூட்டப்படுகின்றனர்.”

“இக்காரணத்திற்காக, நீங்கள் முதுமை அடையும்போது, உங்களுடைய வயதை மற்றவர்களிடம் கூறாதிருப்பது மிகவும் நல்லது. நீங்கள் அதைக் கூறியவுடன், உங்களிடம் அந்த

118
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

www.aanmeegamalar.com

வயதைக் காண்பதோடு, அதனுடன் குறைந்து கொண்டிருக்கும் ஆரோக்கியத்தையும், உயிர்சக்தியையும் சம்பந்தப்படுத்துகின்றனர். வயது ஏறிக்கொண்டிருக்கிறது என்ற எண்ணம் மனக்கவலையை உண்டாக்குகிறது. இவ்வாறாக நீங்கள் உங்கள் உயிர்சக்தியை பலவீனப்படுத்துகிறீர்கள். எனவே உங்கள் வயதை ரகசியமாக வைத்திருங்கள். இறைவனிடம் கூறுங்கள், நான் அழிவற்றவன். நான் நல்ல ஆரோக்கியமெனும் விசேஷ சலுகையுடன் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன். அதற்கு உமக்கு எனது நன்றியைச் செலுத்துகிறேன்.''

மேலும் குருதேவர் அருளுகிறார்: "ஆகவே, எச்சரிக்கையாகக் இருங்கள், ஆனால் அச்சப்படாதீர்கள். அவ்வப்போது உடலை சுத்திகரிக்கும் பத்திய உணவை உண்ணும் முன்யோசனையை பின்பற்றுங்கள். அதனால் உடலில் இருக்க நேரிடும் நோயின் எந்த நிலைகளும் அகற்றப்பட்டுவிடும். நோய்க்கான காரணங்களை அகற்ற உங்களால் முடிந்தவரை மிகச்சிறந்த முயற்சியை செய்த பின்னர் முற்றிலும் பயமின்றி இருங்கள். எல்லாயிடங்களிலும் எவ்வளவோ கிருமிகள் உள்ளன. அவற்றிற்கு நீங்கள் பயப்பட ஆரம்பித்தால் உங்களால் வாழ்க்கையை அனுபவிக்கவே முடியாது. சுகாதாரம் பற்றிய உங்களுடைய அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்குப் பின்னரும்கூட, ஒரு பூதக்கண்ணாடி மூலம் உங்களுடைய இல்லத்தைப் பார்ப்பீர்களானால், உண்பதற்கான எல்லா ஆசைகளையும் இழந்துவிடுவீர்கள்!''.

இறைவனின் தொடர்பால் அச்சம் முடிவுறும்

அன்பிற்குரிய குருதேவர் அருளுகிறார்: "அச்சம் உங்களை ஓயாமல் வாட்டிக்கொண்டே இருக்கிறது. இறைவனுடைய தொடர்பினால் அச்சம் முடிவுறுகிறது. ஏன் தாமதிக்க வேண்டும்? யோகத்தின் மூலம் அவனுடன் அந்த ஆழ்ந்த தொடர்பை நீங்கள் ஏற்படுத்த முடியும். வேறெந்த தேசமும் ஒன்றுமே கொடுக்காததொன்றை இந்தியா உங்களுக்குக் கொடுப்பதற்காக வைத்திருக்கின்றது. எனது குருதேவர் ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வருக்கு அனைத்திற்காகவும் கடமைப்பட்டுள்ளேன்; அவர் எல்லா வழிகளிலும் தலைசிறந்தவராக விளங்கினார். அவருடைய விவேகத்தைப் பின்பற்றியதன்மூலம் மேலை நாட்டில் எனது பணியைச் செய்வதில் வெற்றிகாண முடிந்தது. அவர் கூறினார். "நீ எதைச்செய்தாலும், அதற்கு முன்பாக வேறெவரும் அதைச் செய்திராத அளவிற்குச் செய்ய முயற்சி செய்.'' இந்த எண்ணத்தை நீங்கள் நினைவில் கொள்வீர்களானால், நீங்கள் வெற்றியடைவீர்கள். பெரும்பாலானோர் மற்றவர்களைப் போலவே செய்கின்றனர். நீங்கள் சுயமாக இருக்க வேண்டும். நீங்கள் எதைச் செய்தாலும் அதை நன்றாகச் செய்யுங்கள். நீங்கள் இறைவனுடன் இசைந்துள்ளபோது இயற்கை முழுவதும் உணர்வு பூர்வமாக உங்களுடன் ஆழ்ந்த தொடர்பு கொள்கின்றது.''

மேலும் தொடர்கிறார்: "நாம் பெரும்பாலும் நம்மைப் பற்றியே முதலில் சிந்திக்கின்றோம்; ஆனால் நாம் எப்பொழுதும் மற்றவர்களையும் நம்முடைய மகிழ்ச்சியில் சேர்த்துக்கொள்ளவேண்டும். இதை நாம் நமது இதயங்களின் நற்குணத்தினால் செய்யும்பொழுது, ஒரு பரஸ்பர பரிவு உணர்வை வெளியில் பரப்புகின்றோம். ஆயிரம் மனிதர்களைக்கொண்ட ஒரு சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் இவ்வழியில் நடந்துகொண்டால், ஒவ்வொருவரும் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது நண்பர்களைப் பெற்றிருப்பர். ஆனால் அச்சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் மற்றவர்க்கு ஓர் எதிரியைப்போல் நடந்து கொண்டால், ஒவ்வொருவரும் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பகைவர்களைக்கொண்டிருப்பர்.''

"மற்றவர்களின் இதயங்களை அன்பின் சக்தியினால் வெல்வதே உங்கள் வாழ்வில் பெறக்கூடிய மகத்தான வெற்றி. எப்பொழுதும் மற்றவர்களுக்கு முதலிடம் கொடுக்க முயல்வீர்களானால், முழு உலகமுமே உங்கள் காலடியில் எனக்காண்பீர்கள். பெருமளவு உலக அதிகாரத்துடன் நமக்கென மட்டும் வாழும் மனிதர்கள் விரைவில் மறக்கப்படுகின்றனர். ஆனால் முற்றிலுமாக மற்றவர்களுக்கென வாழ்ந்தோர், என்றென்றும் மறக்கப்படுவதில்லை.''

இறைவனின் இருப்பாகிய அரணுள் பாதுகாப்பாக இருங்கள்.

மதிப்பிற்குரிய குருதேவர் அருளுகிறார்: "இறைவனைப்பற்றி தொடர்ந்து



சிந்தித்துக்கொண்டிருப்பதில் பேரானந்தம் உள்ளது. அவனுக்காகிய அவா எப்பொழுதும் இருக்கவேண்டும். இறைவனது ஜீவித்திருக்கும் இருப்பிலிருந்து அகன்று உங்கள் மனம் ஒருபோதும் அலையாமலிருக்கின்ற, உங்கள் உடல், மனம் மற்றும் ஆன்மாவிற்கு நேரும் மிகப்பெரும் துன்பம்கூட உங்கள் உணர்வுநிலையை அகற்ற முடியாதிருக்கின்ற, ஒரு காலம் வரும். அது அற்புதமானதல்லவா? எல்லா காலமும் இறைவனைச் சிந்தித்து, உணர்ந்து வாழ்வது? எங்கிருந்து உங்களை மரணமோ அல்லது வேறு எதுவோ எடுத்துச் செல்ல முடியாதோ அந்த இறைவனின் இருப்பாகிய கோட்டையினுள் தங்கியிருப்பது? "உனது மனதை என்னில் நிறுத்து; நீ எனது பக்தனாக இரு; முடிவற்ற பிரார்த்தனையுடன் என்னை வணங்கு. இவ்விதமாக என்னைக் குறியாகக்கொண்டு என்னுடன் உன்னை ஒன்றிணைத்து நீ என்னையே அடைவாய்." (பகவத் கீதை அத்.9 ஸ்லோகம் 34) அனைத்து ஆசைகளையும் நீங்கள் உங்களுக்குள் புகவிடாமல் செய்யும்பொழுது, நீங்கள் சாசுவதத்தின் இருப்பை மகிழ்ந்து அனுபவிக்கின்றீர்கள்."

"இவ்வாழ்க்கை விசித்திரமானது. அனைத்தும் மாற்றத்திற்குட்பட்டவை. அதனால்தான் ஒருவர், தன் சந்தோஷத்தை இந்த வாழ்க்கையின்மீது நிலைநிறுத்தக்கூடாது. நமது காலம் மறைந்துவிடும்; நீங்கள் இப்போது பார்த்துக்கொண்டிருப்பவை ஒருநாள் இல்லாமல் போய்விடும். மாற்றம் உங்களை புண்படுத்த நீங்கள் அனுமதிக்கவில்லையென்றால், அது நல்லதே. அது உங்களை புண்படுத்தும்போது, நீங்கள் உணரும் எதிர்ப்பு, நீங்கள் எந்த ஆசைகளையும் வைத்துக்கொள்ளக்கூடாது என்பதை உங்களுக்கும் காட்டுவதற்காகும். நீங்கள் அந்த மெய்பொருளில் நிலைத்திருக்கும்பொழுது, எல்லாவற்றையும் நீங்கள் பற்றற்று அனுபக்கிறீர்கள். ஆகவே, அவனை அறிவதற்கு வேண்டிய முயற்சியை எடுப்பது பயனுடையதாகும். இல்லையேல் வாழ்க்கை உங்களைப் பயங்கரமாக ஏமாற்றக்கூடும்."

குருதேவரின் அனுபவத்தை அவர் கூறுகிறார்: "நான் 1935 ல் இந்தியாவிற்கு திரும்பியபோது, சிறு பிராயத்தில் நான் கண்டு மகிழ்ந்த இடங்களுக்கு செல்வதை ஆவலோடு எதிர்பார்த்தேன். ஆனால் நான் அங்கு சென்றதும் அனைத்தும் மாறிவிட்டிருந்ததைக் கண்டேன். நாடகமேடை வேறு விதமாக அமைக்கப்பட்டிருந்தது. நான் விளையாடி, பறவைகளைக் கண்டு ரசித்த இடமான இச்சாபூரிலுள்ள எனது பழைய இல்லத்திற்கு விஜயம் செய்தபொழுதுதான் மிகப்பெரிய ஏமாற்றம் என்னை ஆட்கொண்டது. நான் அதிர்ச்சி அடைந்தேன். எனது நினைவிலிருந்து ஒரே ஒரு மரம்தான் விட்டுவைக்கப்பட்டிருந்தது. இதுதான் வாழ்க்கையின் போக்கு. ஒன்றனபின் ஒன்றாக, பரிச்சயமானவையும், அன்புக்குகந்தவையும் நம் பார்வையிலிருந்து மறைகின்றன. என் குழந்தைப் பிராயத்தில் இருந்த மாதிரியே எங்கள் இல்லத்தை நான் பார்க்க முடிவதற்கு, அந்த சமயத்தில் நான் எதையும் கொடுத்திருப்பேன். ஆயினும், பின்னர் ஒரு தெய்வீகக்காட்சியில் உண்மையாக்கப்பட்டு நான் அதைக்கண்டேன்; நாங்கள் குளத்தில் நீந்தினோம்; நான் வீட்டிலுள்ள மாடிக்குச் சென்று படுக்கையில் படுத்துக்கொண்டு, பல வருடங்களுக்கு முன் செய்ததுபோல் மாங்கனிகளை உண்டேன்."

"உங்களுடைய ஆசைகளை இப்பொழுதுகூர்ந்து ஆராயுங்கள். அவைகளை வகைப்படுத்தி நல்லவற்றை மட்டும் வைத்துக்கொள்ளுங்கள். அந்த நல்ல ஆசைகள்கூட, இறைவனுக்கான ஒரே முக்கிய ஆசையை தடைப்படுத்திவிட அனுமதிக்காதீர்கள். அந்த ஆசை நெரிக்கப்படக்கூடாது. இறைவனிடம், அவனையே உங்களுக்கு அளிக்க வேண்டுமெனக் கேட்காமல், உங்கள் பூலோக ஆசைகளை நிறைவேற்றும்படி நீங்கள் கேட்கும்போது, நீங்கள் மாபெரும் மாயையில் கட்டுண்டுள்ளீர்கள். தனக்கு எதாவது தேவைப்படுகிறபோதெல்லாம். "அம்மா, எனக்கு ஒரு காசோலை தா" என்று கேட்டுவிட்டு, அவளைப்பற்றிய எந்த சிந்தனையும் இல்லாத மகனைப்பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்? அவ்வாறு இருக்காதீர்கள்; ஒருபோதும் நன்றி மறவாதீர்கள்."

அவர் தொடர்கிறார்: "வாழ்க்கை எனும் புத்தகம் படிக்கும்போது, இறைவனுடன் சம்பந்தப்பட்ட ஆசைகளை நீங்கள் நிறைவேற்றியதிலிருந்து பெற்ற ஞானம் மட்டுமே உங்களுடன் தங்கியிருக்கும். ஆகவே சாசுவதத்திலிருந்து வரும் ரகசியங்கள் ஸ்ரீ ஐ படியுங்கள்; பிறகு ஒவ்வொரு இரவும் உறங்கப்போவதற்கு முன் தியானம் செய்யுங்கள். காலையில் கண் விழித்ததும் இறைவனைப்பற்றி சிந்தியுங்கள். உணவு உண்பதற்கு, முன்பு மட்டுமல்லாது, உண்ணும்போதும் அதன் பின்பும் பிரார்த்தியுங்கள். நீங்கள் பணி செய்து கொண்டிருக்கும்போது, அந்தப் பணியின் சுற்றிலும் இறைவனைப்பற்றிய எண்ணத்தைப் பின்னுங்கள். நீங்கள் இறைவனுடன் தொடர்பில் உள்ளபோது, உங்கள் ஆசைகள் அனைத்தும் மர்மமாக நிறைவேற்றப்படுவதைக் காண்பீர்கள். ஆனால் நீங்கள் முதலில் அவனை நாடவேண்டும், அவன் உங்களுக்கு அனைத்தையும் அளித்துள்ளான்; எனவே, அவனுக்கு முன்னுரிமை அளித்து, அவனுடைய பரிசுகள் அனைத்தையும் நீங்கள் துறந்தால் மட்டுமே, அவன் தன்னைத் தந்தருள்வான். அவனை அறிவதற்கு எல்லாவற்றையும் நீங்கள் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறீர்கள் என்பதை இறைவனுக்கு நீங்கள் காண்பிக்கும்பொழுது. அவன் உங்களிடம் எழுந்துருளுவான்."

"இறைவனை அடைய வேண்டுமென்ற

பயனுள்ள ஒரே ஆசையை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்வதிலிருந்து உலகச் சூழல் உங்களைத் தடை செய்ய முயலும். ஆனால் தினமும் இதைப்பற்றி நீங்கள் உங்களை ஞாபகப்படுத்திக் கொண்டேயிருக்கவேண்டும். புகை பிடிப்பதில்லை என்றோ அல்லது கன்னாபின்னாவென்று சாப்பிடுவதில்லையென்றோ அல்லது பொய் சொல்வதில்லையென்றோ அல்லது ஏமாற்றுவது இல்லையெள்றோ நீங்கள் தீர்மானம் செய்தபிறகு நீங்கள் இந்த நல்ல ஆசைகளில் உறுதியுடன் இருங்கள். தவறான சூழ்நிலை உங்கள் மனவலிமையை பலவீனப்படுத்தி, தவறான ஆசைகளை வரவழைக்கின்றது. திருடர்களுடன் வாழ்ந்தால், அதுமட்டுமே வாழும் முறையென நீங்கள் எண்ணுவீர்கள். ஆனால் தெய்வீக புருஷர்களுடன் வாழுங்கள். தெய்வீகத் தொடர்வு ஏற்பட்ட பிறகு வேறெந்த ஆசையும் உங்களை சபலப்படுத்த முடியாது. அவை அனைத்தும் சுவையற்றதாகிவிடுகின்றன. ஆகவே, ஒரு சில நொடிப்பொழுது ஆழ்ந்த தியானம், அல்லது ஒரு மகானின் சகவாசம், உங்களை மாயசாகரத்தைக் கடக்கச் செய்து இறைவனது கரைகளில் கொண்டுசேர்க்கும், ஒரு தெய்வீக எழுச்சியூட்டும் கட்டுமரமாக இருக்கும்” என்று அன்பிற்குரிய குருதேவர் உண்மையை எடுத்துரைக்கிறார்.

இந்த கட்டுரை வெளிப்படுத்தியுள்ள அன்பு குருதேவருடைய போதனைகளுக்கேற்றவாறு ‘துன்பமே இன்பம்’ என்ற தலைப்பிட்ட ஒரு சிறு கதையை இங்கே குறிப்பிட நான் விரும்புகின்றேன்.

ஒரு சிறு அறையில் பத்துபேர் தங்கியிருந்தனர். பத்து பேரும் ஒரே அறையில் இருந்துகொண்டு எல்லா வேலைகளையும் செய்வது எல்லோருக்குமே துன்பமாக இருந்தது. யாரும் வேறு இடத்திற்குச் செல்லவும் விரும்பவில்லை.

அந்த ஊருக்கு துறவி ஒருவர் வந்தார். பத்து பேரும் அவரைச் சந்தித்தனர். துறவியாரே! நாங்கள் எல்லோரும் ஒரு சிறு அறையில் தங்கி மிகுந்த துன்பத்தை அனுபவிக்கிறோம். இதிலிருந்து விடுதலை பெற நல்ல வழி சொல்லுங்கள்” என்று கேட்டார்கள். “அப்படியா?” என்ற அவர், “ஒருவாரம் மட்டும் அந்த அறைக்குள் உங்களோடு ஒரு செம்மறி ஆட்டையும் தங்கவையுங்கள். அதன் பிறகு உங்கள் நிலையை என்னிடம் வந்து சொல்லுங்கள் “ என்று கூறி அவர் அனுப்பிவைத்தார். ஒருவாரம் கழித்து அந்தப்



குருப்ரியா

பத்துபேரும் பரிதாபமான நிலையில் வந்து அவரைக் கண்டார்கள். “ஐயா! எங்களால் செம்மறி ஆட்டின் நாற்றத்தைத் தாங்க முடியவில்லை. இன்னும் இரண்டு நாட்கள் அதனுடன் தங்கினால் நாங்கள் இறந்தே போய்விடுவோம்” என்று புலம்பினார்கள். “அப்படியானால் அந்தச் செம்மறிஆட்டை உங்கள் அறையிலிருந்து துரத்திவிடுங்கள். ஒருவாரம் கழித்து மீண்டும் என்னைப்பாருங்கள்” என்றார் அவர். அடுத்த வாரம் அவர்கள் துறவியிடம் வந்தனர். “துறவியாரே! நாங்கள் அந்த அறைக்குள் இப்பொழுது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். செம்மறிஆடும் இல்லை; புழுக்கை நாற்றமும் இல்லை. இப்பொழுது எங்களுக்கு அந்த அறை சொர்க்கமாக உள்ளது. உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை” என்று சொல்லி விடை பெற்றார்கள்.

“நாம் எங்கே வாழ்ந்தாலும் பயமின்றி வாழவேண்டும்; அதே சமயம் எச்சரிக்கையுடனும் வாழ வேண்டும் என்கிறார் குருதேவர். நம்மைப்பற்றி மட்டும் சிந்திக்காமல் நமக்குக் கீழே அதாவது கீழ் நிலையில் வாழுபவர்களைப்பற்றியும் சிந்தித்தவண்ணம் வாழவேண்டும். இந்தச் சிந்தனை சமநிலை உணர்வினால்தான் வருகிறது. மற்ற மனிதர்களிடத்தில் ஒரு பரஸ்பர பரிவுணர்வினைப் பரப்ப வேண்டும். இவையெல்லாம் ஏற்படவேண்டுமென்றால் இறைவனுடனுள்ள பற்றும் அன்பும்தான் காரணம். இவ்வாறான மனநிலை ஒரு மனிதனுக்கு ஏற்பட்டால் அம்மனிதன் வாழுமிடத்தில் துன்பம் மிகுந்திருந்தாலும் துன்பத்தைவிட, நாம் வெளிப்படுத்தும் அன்பானது இன்பத்தை உணரச்செய்யும்.

துன்பம் அந்த அன்பில் மறைந்துவிடுகிறது. சுயநலம் துன்பத்தையும் பொதுநலம் இன்பத்தையும் கொடுக்கும். அவ்வாறான மனப்பான்மை எங்கிருந்து வருகிறது? அது இறைவனிடத்திலிருந்துதான் வருகிறது. அனைத்திலும், அனைவரிடத்திலும் இறைவன் நிறைந்துள்ளதை உணரும்போது நிச்சயமாக இந்த மனப்பான்மை வரும். அப்பொழுது துன்பங்கள் அனைத்தும் இன்பமாக மாறிவிடும். கவர்ச்சி மிகுந்துள்ள, குருதேவரின் போதனைகள் ‘அனைவரும் ஒன்று’ என்று நினைக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. அதேபோன்று ‘துன்பமே இன்பம்’ என்ற கதையும் அமைந்துள்ளது. .

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909


# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**

இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com
aanmeegamalar1@gmail.com



## கொடிய காட்டில் இறை சிந்தனையுடன் ஐயப்பனை தரிசிக்க ஆதி மனிதர்கள், கடைபிடித்த பழக்கவழக்கமே

# விரத முறை

சபரிமலை ஐயப்பனை வருடந்தோறும் சென்று வரும் பல அன்பர்களுக்கு சபரிமலையைப் பற்றிய முழுவதுமான தகவல்கள் தெரியாமலேயே அவைகள் மறைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற சில தகவல்களை தெரிந்து கொள்ள பல்வேறு அன்பர்கள் கூறிய தகவலை தொகுத்து நமது ஆன்மிக மாதமிருமுறை மெயில் புத்தகம் வாசகர்களுக்கு வழங்குகிறது.

விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் வளராத சமயத்தில் காசிக்கு செல்பவர்கள் குடும்ப வாழ்க்கையை முடித்து, கடமைகள் அனைத்தையும் துறந்த பின்தான் செல்வார்கள். அதற்கு காரணம் காசிக்கு செல்பவர்கள் திரும்ப வருவார்கள் என்று யாராலும் நிச்சயம் சொல்ல முடியாது. ஏனென்றால் வாகன வசதியோ, தொழில் நுட்பமோ அக்காலத்தில் இல்லை.

காசி பயணத்தைப் போன்றுதான் சபரிமலை பயணமும் அமைந்தது. அக்காலத்தில் சபரிமலை செல்பவர்கள் “போய் வருகிறேன்” என்று கூறமாட்டார் கள். காரணம் சபரிமலைக்கு சென் றால் திரும்பி வர எத்தனை நாட்கள் ஆகும் என்று அவர்களுக்கே தெரியாது. வந்தாலும் வரலாம் வராமலும் போகலாம் என்ற ஒரு நிலை இருந்தது.

ஐயப்பனின் சன்னதி இங்குதான் உள்ளது என்று யாராலும் சரியாக கணிக்க முடியாதவாறு காட்டைச் சுற்றி பல்வேறு மரங்களும், கோரைப் புற்களுமாக சூழ்ந்திருந்ததாலும், சிங்கம், புலி, பாம்பு, யானை போன்ற விலங்குகளின் சாம்ராஜ்யம் நடந்து கொண்டிருந்ததாலும் சபரிமலை பயணம் மிக... மிக... சிரமம் வாய்ந்த பயணமாகவே இருந்தது.

இதுபோன்ற சிரமமான பயணத்தை துவங்கு வதற்கு முன்பே, காட்டிற்குள் சென்று தங்கி, ஐயப்பனை எவ்வாறு காணவேண்டும் என்ற பயிற்சியாக அமைந்ததுதான் “சபரி மலைக்கு மாலை அணியும் பழக்கம்”.

வெறும் கட்டாந்தரையில் படுப்பது, காலணி அணியாமல் நடப்பது, போதை வஸ்த்துக்களை விடுவது, இரண்டு வேளை பச்சைத் தண்ணீரில் குளிப்பது, இறை சிந்தனையுடன் இருப்பது, குடும்ப உறவிகளிடமிருந்து சற்று விலகி இருப்பது, சுவை மிகுந்த உணவை தவிர்ப்பது, புலால் உணவை தவிர்ப்பது... போன்ற அனைத்து விரத கட்டுப்பாடும், கொடிய காட்டில் மனிதன் இறை சிந்தனையுடன் ஐயப்பனை தரிசிக்க கடைபிடிக்கப்பட்ட பழக்கவழக்கமே விரத முறையாகவும் கடைபிடிக்கப்பட்டது.




மிக... மிக... கடினமான விரத முறையாக இருந்த காரணத்தாலும், உயிருக்கு உத்திரவாதம் இல்லாத பயணமாக சபரிமலை பயணம் இருந்த காரணத்தாலும் சபரிமலைக்கு மாலை அணிவோர் மிகக் குறைந்த சதவீதமாகவே இருந்தது.

இதுபோன்ற சிரம் மிகுந்த காலத் தில் ஐயப்பனை தரிசித்த அனைவரும் ஐயப்பனுக்கு நிகரா கவே கருதப்பட்டதால்தான்,




அக்காலத்தில் துளசி மற்றும் சந்தன மாலை அணிந்த ஐயப்ப பக்தர்களை "சாமி சரணம்" என்று ஐயப்பனுக்கு நிகராகவே அழைத்தனர்.

மேற்கண்ட நடைமுறைகள் அனைத்தும் சுமார் 25 முதல் 30 ஆண்டுகளுக்கு முன்புவரை கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகளாகும். (கால மாற்றம் மற்றும் விஞ்ஞான வளர்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சி, மலையை சுற்றி சிமெண்ட் சாலை, நினைத்த பொருள் நினைத்த இடத்தில் வாங்கும் வசதி போன்ற பல்வேறு காரணங்களால் சபரிமலை தற்போது தனது தனித்துவத்தை இழந்து,மிகப்பெரிய சுற்றுலா தலமாகவும், அரசுக்கு வருமானம் ஈட்டித் தரும் மிகப்பெரிய அருங்காட்சியகமாகவே மாறிவிட்டது.) தற்போது பல்வேறு பல மலைகளைச் சுற்றி நடு நாயகமாக அமர்ந்திருக்கும் ஐயப்பனுக்குரிய பல்வேறு சிறப்புகளை எளிமையாக தொகுத்து கொடுத்துள்ளோம்.

## தங்கச் சிலை உருவான விதம்:

பந்தள மகாராஜாவால் செய்யப்பட்ட ஐயப்பன் சிலை ஐம்பொன்களால் செய்யப்பட்ட சிலையாகும். ஒரு சில சமூக விரோத கும்பலால் 19ஆம் நூற்றாண்டில், ஐயப்பன் குடியிருக்கும் இடம் எரிக்கப்பட்டுவிட்டதால், பந்தள மகாராஜாவால் செய்யப்பட்ட சிலை உருகியது, உருகிய பஞ்சலோகத்தை திருவிதாங்கூர் தேவசம் போர்டு மீட்டு, மிகப்பெரிய மணியாக உருமாற்றினர். அந்த மணி தற்போது சபரிமலை 18ம் படிக்கு வலப்புறம் நிறுவியுள்ளனர். பஞ்சலோக சிலை உருக்கப்பட்டதால் புதியதாக ஐயப்பன் சிலையை தங்கத்தால் செய்து பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## பதினெட்டு படிகளின் தத்துவம்:

ஐயப்பன் தன்னுடைய 18 கருவிகளைக் கொண்டு 18 படிகளை உருவாக்கியதாக கூறப் படுகிறது அந்த 18 கருவிகள்

1.வில், 2. வாள், 3. வேல், 4. கதை, 5.அங்குசம், 6.பரசு, 7. பிந்திபாவம், 8. பரிசை, 9. குந்தம், 10.ஈட்டி, 11. கை வாள், 12. முன்தடி, 13. கடுத்தி வை, 14. பாசம், 15. சக்கரம், 16. ஹலம், 17.மழு, 18.முஸலம் ஆகிய 18 போர்க் கருவிகள் ஆகும்.

பதினெட்டுப் படிகளையும், ஐந்து இந்திரி யங்கள், ஐந்து புலன்கள், ஐந்து கோசங்கள், மூன்று குணங்கள் என்று கூறுகிறார்கள் அவை முறையே

இந்திரியங்கள் ஐந்து (பஞ்சேந்திரியம்): கண், காது, மூக்கு, நாக்கு, கை கால்கள்.

புலன்கள் ஐந்து (ஐம்புலன்கள்): பார்த்தல், கேட்டல், சுவாசித்தல், ருசித்தல், ஸ்பரிசித்தல்.

கோசங்கள் ஐந்து (பஞ்ச கோசங்கள்): அன்ன மய கோசம், ஆனந்தமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், ஞானமய கோசம்

குணங்கள் மூன்று (த்ரி குணங்கள்): ஸத்வ குணம், ரஜோ குணம், தமோ குணம்

இந்த பதினெட்டையும் கட்டுப் படுத்தியோ ஜெயித்தோ வாழ பதினெட்டுப் படிகளை ஏற வேண்டும்.

## 18 வகை தத்துவங்கள்

மெய், வாய், கண், காது, மூக்கு, சினம், காமம், பொய், களவு, சூது, சுயநலம், பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, ஸத்ய, தாமஸ, ராஜஸ, என்ற 18 வகை குணங்களை தாண்டினால் பகவான் ஐயப்பனைக் காணலாம்.

## 18 படிகளில் வாஸம் செய்யும் தேவதைகள்

| |
|---|
| ஒன்றாம் திருப்படி: சூரிய பகவான் |
| இரண்டாம் திருப்படி: சிவன் |
| மூன்றாம் திருப்படி: சந்திர பகவான் |
| நான்காம் திருப்படி: பராசக்தி |
| ஐந்தாம் திருப்படி: அங்காரக பகவான் |
| ஆறாம் திருப்படி: முருகன் |
| ஏழாம் திருப்படி: புத பகவான் |
| எட்டாம் திருப்படி: விஷ்ணு |
| ஒன்பதாம் திருப்படி: வியாழ ( குரு ) பகவான் |
| பத்தாம் திருப்படி: பிரம்மா |
| பதினொராம் திருப்படி: சுக்கிர பகவான் |
| பனிரெண்டாம் திருப்படி: இலட்சுமி |
| பதிமூன்றாம் திருப்படி: சனி பகவான் |
| பதிநான்காம் திருப்படி: எம தர்ம ராஜன் |
| பதினைந்தாம் திருப்படி: இராகு பகவான் |
| பதினாறாம் திருப்படி: சரஸ்வதி |
| பதினேழாம் திருப்படி: கேது பகவான் |
| பதினெட்டாம் திருப்படி: விநாயகப் பெருமான் |

இதில் கவனிக்கப்பட வேண்டியவை ஒற்றைப் படை வரிசையில் நவக்ரஹ தேவதாக்களும் இரட்டைப்படை வரிசையில் தெய்வக் குடும்பமும் வாஸம் செய்வதாக ஐதீகம், எனவேதான் படிபூஜை சபரிமலையில் சிறந்த முறையில் செய்யப்படுகிறது படிபூஜை நடைபெறும் தினத்தன்று 18 படிகளை பூக்களாலும்; விளக்குகளாலும் அலங்கரித்து அவற்றிற்கு கீழே 18 படி ஏறுமிடத்தில் பிரதான தந்திரி 18 வெள்ளி கலசங்களை வைத்து படி பூஜை செய்வார்.

## 18 திருநாமங்களுடன் ஐயப்பன் அமர்ந்திருக்கும் படிகள்

| |
|---|
| ஒன்றாம் திருப்படி: குளத்துப்புழை பாலகன் |
| இரண்டாம் திருப்படி: ஆரியங்காவு ஐயன் |
| மூன்றாம் திருப்படி: எரிமேலி சாஸ்தா |
| நான்காம் திருப்படி: அச்சன்கோயில் அரசன் |
| ஐந்தாம் திருப்படி: புவனேஸ்வரன் |
| ஆறாம் திருப்படி: வீரமணி கண்டன் |
| ஏழாம் திருப்படி: பொன்னம்பல வாஸன் |
| எட்டாம் திருப்படி: மோஹினி பாலன் |
| ஒன்பதாம் திருப்படி: சிவ புத்ரன் |
| பத்தாம் திருப்படி: ஆனந்த சித்தன் |
| பதினொன்றாம் திருப்படி: இருமுடிப் பிரியன் |
| பனிரெண்டாம் திருப்படி: பந்தள ராஜகுமாரன் |
| பதிமூன்றாம் திருப்படி: பம்பா வாஸன் |
| பதினான்காம் திருப்படி: வன்புலி வாஹனன் |
| பதினைந்தாம் திருப்படி: ஹரிஹர சுதன் |
| பதினாறாம் திருப்படி: ஸத்குரு நாதன் |
| பதினேழாம் திருப்படி: பிரம்மாண்ட நாயகன் |
| பதினெட்டாம் திருப்படி: ஸத்ய ஸ்வரூபன் |




## படிபூஜை

18 மலை தேவதைகளை வழிபாடு செய்வதற்காகத்தான் படிபூஜை நடத்துகிறார்கள் அவை என்னவென்றால்

சபரி மலை, பொன்னம்பல மேடு, கவுண்ட மலை, நாக மலை, சுந்தர மலை, சிற்றம்பல மேடு, கல்கி மலை, மாதங்க மலை, மைலாடும் மலை,ஸ்ரீ மாத மலை, தேவர் மலை, நீலக்கல் மலை, தலப்பாறை மலை, நீலி மலை, கரி மலை, புதுச்சேரி, அப்பாச்சி மேடு, இஞ்சிப் பாறை

## 18 படிகளின் சிறப்பு




7. 18 படிகளும் ஒரே கல்லினால் ஆனது எல்லாப் படிகளும் 9 அங்குல உயரமும் 5 அடி நீளமும் உடையதாகும் தேங்காய் உடைத்துப் படிகள் தேய்வதைத் தடுக்கும் பொருட்டு திருவாங்கூர் தேவஸ்தானம் பஞ்ச லோகத்தினால் ( தங்கம் ; வெள்ளி ; பித்தளை ; செம்பு ; ஈயம் ) தகடு செய்து படிகளின் மேல் அமைத்துள்ளனர்.

18 படிகளில் இருமுடிக் கட்டு இல்லாமல் படியேறி வர சிலருக்கு மட்டுமே உரிமையுண்டு அவர்கள் பந்தள ராஜ குடும்பத்தினர், தந்திரிகள், மகர சங்கராந்தியன்று திருவாபரணப் பெட்டியை சுமந்து வரும் ராஜ பிரதிநிதி திருவாபரணப் பெட்டியையும் தங்க அங்கியையும் வரவேற்கும் தேவஸ்தான உறுப்பினர்கள் (வரவேற்கும் சமயத்தில் இவர்கள் ஐயப்பன் அனுமதி பெற்று மாலையணிந்திருக்க வேண்டும்)




## இருமுடியுடன் மட்டும்தான் 18ம் படி ஏற வேண்டும்

சபரி மலையில் உள்ள பதினெட்டு படிகள் ஆன்மீக சக்தி நிறைந்த பகுதி. முழுமையான ப்ராணன் கொண்ட பகுதி. அதனால் தான் அதற்கு பூஜைகள் நடத்தப்படுகிறது. வேறு எந்த கோவிலிலும் படிக்கட்டுகள் கட்டிடங்களுக்கு வருடா வருடம் பூஜை செய்யமாட்டார்கள்.

இருமுடி கட்டி தலையில் அழுத்தம் கொடுத்த வண்ணம் தலையில் ப்ராணன் செயல்படும் நிலையில் அந்த படிக்கட்டுகளை அணுகினால் முழுமையான சக்திமாற்றம் ஏற்படும். இதையே நியதியாக்கினார் சபரிமலை பகவான்...

இருமுடி கட்டாமல் கூட ஐயப்பனை தரிசனம் செய்யலாம். ஆனால் இருமுடிகட்டாமல் பதினெட்டாம் படியை தொட அனுமதிக்காததற்கு இதுதான் காரனம். சபரிமலையில் பின்பற்றும் அனேக விஷயங்களில் நுட்மமான பின்புலம் உண்டு.

# தத்துவ நூல்கள் தோன்றியதன் அவசியம்

ஒரு கருத்தைச் சொல்லுகிறேன் கேள். ஒரு குறிப்பிட்ட கொள்கையின் மீது இது உனக்கு உதவும் பொருளைப் பற்றியும் ஆராய்ச்சி செய்யலாம். சர்வ வல்லமை என்றால் என்ன? சர்வ வல்லமை படைத்தவனே ஆண்டவன் என்பது உண்மை ஆகிறது. இதை எப்படி எடுத்துக் கொள்வது என்றால் வாழுகின்ற உயிர்களில் இருந்து உற்பத்திகள் என்ற தோற்றங்கள் கிடைக்கின்றன. ஒவ்வொரு உற்பத்திக்கும் காரணமான உயிர்ப்பிண்டமும் அதனதன் வேறு வேறான தனியான முறையான பரம்பரை உற்பத்தியை ஒரு சிறிய புள்ளி போன்ற ஒரு புதிய சக்தியில் கொண்டுள்ளது. இந்த சிறு சக்திப்புள்ளி ஒரு உயிர்ப்புள்ளியாகும். இது ஒவ்வொரு நிமிடத்திலும் ஒவ்வொரு புழுவிலிருந்து மனிதன் வரை அனைவரிடத்தில் உற்பத்தி ஆகின்ற சக்தியாக தோன்றி தோன்றி மறைகின்றது. இதுதான் ஆண்டவனின் வலிமையான செயலாகும். ஆகவே ஆண்டவனுக்கு சர்வ வல்லமை படைத்தவன் என்று பெயர்.

❖❖❖

மண்ணின் மீது பல பிறப்புகள் தோன்றுகின்றன. சிற்சில சமயங்களில் சிற்சில பிறப்புகளிலும் அல்லது பல பிறப்புகளின் மீதும் ஒரு நிரந்தர கட்டளைகள் இயற்கையாக தோற்றுவிக்கப்படுகின்றன. அது கீழ்க்கண்டவண்ணம் தோன்றுகிறது. இதனால் உற்பத்திகளின் எண்ணிக்கை, கூட்டம், பிறப்பு இவைகளின் மீது ஒரு கட்டுப்பாடு தோன்றி எல்லா உயிரினப் பிறப்புகளிலும் அவை அவை தனின் பிறப்பு வலிமையும் வாழ்வு எண்ணிக்கையின் வலிமையும் கூட்ட அளவின் வலிமையும் சரியாகவும் தானாகவும் சமன்பாடு என்ற கொள்கைக்குள் வந்து விடுகிறது. இச்சமன்பாடு அந்த உயிரினங்களின மீது எப்படி ஏற்படுகிறது என்றால் விஞ் ஞானரீதியாகவும், சூழ்நிலை என்ற தத்துவத்தாலும், சூழ்நிலை தத்துவங்களின் கட்டாய இறுக்கத்தாலும் உயிர்களின் சமன்பாட்டுத் தன்மைகள் எண்ணிக்கையிலும் பிறப்பிலும் குறைந்தும் அதிகரித்து விடுகின்றன. இதன் எதிரொலி என்ன என்று கேட்டால் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற உயிரினங்களின் ஆண் பெண்ணின் கூட்டத்தைப் பொறுத்தே அவைகளின் வர்க்க உற்பத்தியும் கட்டுப்படுத்துகிறது. பல சில சமயங்களில் அதிகமாகவும் செய்கின்றது. இதை நீ உணரு. மனிதனாக எதிலும் செயற்கை முறையில் உயிர் வர்க்கங்களின் சமநிலைப்பாட்டை சரி செய்ய முடியாது. செய்தால் பிற உயிர்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் துன்பம் ஏற்பட்டு விடும்.



❖❖❖

சமன்பாடு அல்லது உயிர்களின் சமநிலைப்பாடு என்ற நிரந்தர தத்துவம் நமது வேலையல்ல. இது ஆண்டவனின் வேலையே. இன்று வரை எவருடைய ஆட்சியின்கீழ் அனைத்து வர்க்கங்களின் பிறப்பும் ஒவ்வொன்றும் எப்படி எண்ணப்பட்டு வருகிறது. விஞ்ஞானத்துறையில் பலர் இந்த சமநிலைப்பாடு என்பது தானாக முறைப்படுத்தப்பட்ட விஞ்ஞானத்தின் உற்பத்தி சக்தியே என்கின்றனர். வேறு சிலர் இதுவே கடவுளின் வேலை என்று சொல்லுகின்றனர்.

❖❖❖

நீங்கள் இதைப் பற்றி என்ன கருத்து கூறுகிறீர்கள்? உயிர்ச்சமநிலைப்பாட்டின் கொள்கையில் தங்களுடைய கருத்தும் எண்ணமும் என்ன? எனது எண்ணம் இதிலே முக்கியமானது அல்ல. அங்கு நிகழுகின்ற உண்மையே தேவை. பிறந்து வாழ்ந்து வர்க்கத்தை வளர்த்து கொண்டு வருகின்ற ஒரு கருத்தின் மீது அதைவிட அதை கண்காணிக்கின்ற மற்றொரு கருத்தின் கண்காணிக்கின்ற முறை என்பது மிகவும் அற்புதமாக இருக்கின்றது. அதற்கே உற்பத்தி என்று பெயர். இக்கருத்து எல்லா

உயிர்க்குலங்களிலும் ஒரு சுழற்சி வட்டமாக நிகழுகிறது. இந்த சுழற்சிவட்டத்தை அனைவரும் படிக்க வேண்டும்.

❖❖❖

பளீரென்று ஒளியோடு நினைக்கின்ற தன்மை. இதற்கே புரிகின்ற தன்மை என்று பெயர். புத்தியோடு புரிகின்ற இத்தன்மையை எல்லா உயிர்களும் வைத்துக் கொண்டு இருக்கின்றன. இதன்படியே உலகில் சமநிலைப்பாடும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற வர்க்கத்தின் கணிசத்தன்மையும் இருக்கிறது. இத்தன்மையே உலகில் இருந்து கொண்டு இருக்க கூடிய உயிர்களின் கணிசத்தன்மையை அவ்வபொழுது பிறப்புகளின் வழியாக கட்டுப்படுத்தி வருகிறது. வாழும் உயிர்க்கும் அதன் தற்காலிக நிரந்தரத்துவத்திற்கும் ஒரு தொடர்பு உண்டு.

❖❖❖

பளீரென்று ஒளிருகின்ற நிரந்தரத்துவத்தன்மை அல்லது ஐ.க்யூ. என்ற வேகம் இதுவே. முடிவெடுக்கின்ற தன்மைக்கே உயிரின் தன்மை என்று பெயர். இதுவே தோன்றும் உயிர்க்கும் வடிவம், வளர்ச்சி, வாழ்நாட்களை நீட்டிப்பது போன்றவைகளைச் செய்கிறது. இந்த அற்புத வேகமே சிலரிடமும் பலரிடமும் அப்படியே பிராணிகளிடம் கூட மேற்சொன்ன வேகத்தைக் குறைக்கவும் கூட்டவும் செய்கின்றது. இதைத்தான் பிரக்ஞை அல்லது உயிரின் நினைவு என்று சொல்வேன்.

❖❖❖

மேலே குறிப்பிட்ட பொன் போன்ற கொள்கையே உலகில் வடிவங்களைத் தோற்றுவிக்கின்றன. அதுவே மனிதன் உட்பட எல்லா வடிவ உருவங்களுக்கும் பிரக்ஞையே வைக்கின்றது. இவ்விரண்டும் தான் சிருஷ்டி கர்த்தாவான கடவுளின் வேலை. இதனால் இந்துக்களும், இந்துமதமும் கடவுளை உறுதியாக நம்புகின்றனர். அவனுக்கு உருவமும் உண்டு உருவமில்லா அருவமும் உண்டு என்கின்றனர். இக்கடவுளின் விளையாட்டை இம்மதம் பேசுகின்றது.

❖❖❖

10. உலகிலுள்ள எனது சகோதர சகோதரிகளே நீங்கள் இக்கொள்கையில் விருப்பம் உள்ளவர்களாக இருந்தால் இத்தத்துவக் கருத்தைப் பாருங்கள், படியுங்கள், ஆராய்ச்சி செய்யுங்கள். நான் எனது கொள்கை இதுவே என்று சொல்லி எதையும் உங்கள் தலையில் திணிக்கவில்லை.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க













**aanmeegamalar.com**

இணையதளத்தை பார்க்கவும்









# ஐயப்பனின் அறுபடை வீடுகள்

தமிழ் கடவுளான முருகனைப் போல் தர்ம சாஸ்தாவான ஐயப்பனுக்கும் அறுபடை வீடுகள் உள்ளன. அவை:

| | |
|---|---|
| 1 ஆரியங்காவு | 2 அச்சன்கோவில் |
| 3 குளத்துப்புழா | 4 எரிமேலி |
| 5 பந்தளம் | 6 சபரிமலை |

## 1. ஆரியங்காவு

நெல்லை மாவட்டம் செங்கோட்டையில் இருந்து 20கிலோமீட்டர் தொலைவில், கேரள மாநிலத்தில் இந்த ஊர் அமைந்துள்ளது. இங்குள்ள கோயிலில் ராஷ்ட்ர குலதேவி புஷ்கலையுடன் அரசராக அய்யப்பன் காட்சி தருகிறார்.

## 2. அச்சன்கோவில்

செங்கோட்டையில் இருந்து 30கிலோமீட்டர் தொலைவில் கேரள மாநிலத்தின் அடர்ந்த வனப்பகுதியில் இது அமைந்துள்ளது. பரசுராமரால் தோற்று விக்கப்பட்ட இந்த கோயிலின் விக்ரகம் மட்டுமே பழமை மாறாதது என்கிறார்கள். இங்கு வனராஜனாக அமர்ந்த நிலையில் கையில் அமுதமும் கருப்ப னின் காந்தமலை வாளும் ஏந்திய திருக்கோலத்தில் அய்யப்பனை தரிசிக்கலாம். இவருக்கு இருபுறமும் பூர்ணா, புஷ்கலை தேவியர் மலர் தூவுவது போல் காட்சி தருகின்றனர். இங்குள்ள ஐயப்பனைகல்யாண சாஸ்தா‘ என்று அழைக்கிறார்கள். இதனால்,


www.aanmeegamalar.com
ஆரியங்காவு


அச்சன்கோவில்


www.aanmeegamalar.com
குளத்துப்புழா


எரிமேலி



பந்தளம்




சபரிமலை

திருமணத்தடை உள்ளவர்கள் இங்கு அதிகம் வந்து வழிபடுகின்றனர்.

### 3. குளத்துப்புழா

செங்கோட்டையில் இருந்து 50கிலோமீட்டர் தொலைவில் கேரளாவில் அமைந்துள்ளது இது. இங்கு அய்யப்பன் குழந்தை வடிவில் குடி கொண்டுள்ள தால்பால சாஸ்தா' என்று அழைக் கப்படுகிறார். இதனை உறுதிப்படுத்தும் வகையில், இந்த கோவில் வாசலும் சிறு குழந்தைகள் நுழையும் அளவுக்கே கட்டப்பட்டு உள்ளது.

### 4. எரிமேலி

கேரளாவில் உள்ள இத்தலத்தில் அய்யப்பன் கைகளில் வில், அம்பு ஏந்தி வேடன் போன்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். எருமேலியும் கேரளாவிலேயே உள்ளது.

### 5. பந்தளம்

இந்த தலத்தில் தான் பந்தள மன்னன் ராஜசேகர பாண்டியனால் அய்யப்பன் சீரோடும், சிறப்போடும் வளர்க்கப்பட்டார். அந்த நாட்டு மன்னன் கட்டிய கோயில் இங்கு உள்ளது. இங்கு சுவாமி ஐயப்பனுக்குரிய உரிய திருஆபரணங்கள் வைக்கப்பட்டுள்ளன. பந்தளம் என்பது ஐயப்பன் வாழ்ந்ததாக கரு தப்படும் பந்தளம் அரண்மனை இருக்கும் இடம். இது அச்சன்கோவில் நதியின் கரையில் அமைந்துள்ளது. மகரவிளக்கின் போது இங்கிருந்த கொண்டு செல்லப்படும் ஆபரணங்கள் தான் ஐயப்பனுக்கு அணிவிக்கப்படுகின்றன. இதன் அருகில் செங்கனூர் ரயில் நிலையம் உள்ளது.

### 6. சபரிமலை

கேரளாவில் உள்ள இங்கு தர்ம சாஸ்தாவான ஐயப்பன் தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு யோக சின் முத்திரை தாங்கி கேட்பவர்களுக்கு கேட்டவரம் வாரி வழங்கும் வள்ளலாக காட்சி தருகிறார்.

சபரிமலைக்கு புனித யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்கள், ஐயப்பனின் அறுபடை வீடுகளான இந்த 6 கோயில்களுக்கும் சென்று வழிபட்டால் சீரும் சிறப்பும் பெற்று வாழ்வார்கள் என்பது நம்பிக்கை.

இயற்கையை விரும்பும் ஐயப்பனை முடிந்த அளவு நாமும் சென்று தரிசித்து இயற்கைக்கு எந்த இடையூறும் செய்யா மல் அவன் அருளைப் பெற்று வர ஐயன் அருளை வேண்டி நிற்போம்.

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# திருவண்ணாமலையில் வாழ்ந்த தவயோகிகள்

திருவண்ணாமலை அண்ணாமலையாரின் இன்னருள் பெற்ற ஞானியர் பலர். பற்பல சித்தர்களும், ஞானிகளும், மகான்களும் இத்தலம் சேர்ந்து மகிமை பெற்றுள்ளனர் அவர்களுள் சிலர்:

திருவண்ணாமலையில் அவதரித்தவர் அருணகிரி நாதர். சிற்றின்ப மோகத்தால் சீரழிந்து வாழ்க்கையில் சலிப்படைந்து, பிறவியை வெறுத்து அண்ணாமலையார் ஆலய வல்லாள மகாராஜன் கோபுரத்தின் மீதிருந்து குதித்து உயிரைப் போக்கிக் கொள்ள முயன்றபோது, முருகப்பெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்டார். "முத்தைத்தரு' என அருணகிரிக்கு முருகன் அடியெடுத்துக் கொடுக்க "திருப்புகழ்' தோன்றியது. 15ம் நூற்றாண்டிலே திருவண்ணாமலையிலே வாழ்ந்தவர்.

"திருவண்ணாலைக்கு வந்து ஞான குருவாக இரு' என்று அண்ணாமலையாரின் நேர்முக அழைப்பினால் ஞானியானவர், சீடரையே குருவாக்கிய செந்தமிழ் யோகிகுகை நமச்சிவாயர்.

திருவண்ணாமலை தீர்த்தக் குளத்து நீரையே திரட்டிக் குடமாக்கி (கி.பி.1290) அதிலேயே தண்ணீரை எடுத்துச் சென்று, அண்ணா மலையாருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டவர் சித்த மகா சிவயோகி பாணி பத்திரசாமி.

உண்ணாமுலை அம்ம னிடமே உணவைக் கேட்டுப்பாடி தேவியின் திருக்கரங்களால் பொங்கலைப் பெற்றவர் தில்லைக் கோயிலின் திரைச் சீலை யிலே தீப்பிடித்ததை திருவண்ணாமலையில் இருந் தபடியே அறிந்த தீயைத் தேய்த்து அணைத்த ஞானச் செல்வர் குரு நமசிவாயர்.

திருவண்ணாமலை ஆதினத்தின் முதல் குருவாகி குன்றக்குடி ஆதினத்தை ஸ்தாபித்தவர் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர்.

திருவண்ணாமலைப் பகுதியிலே ஏற்பட்ட பஞ் சத்தைப் போக்க, ஏரியை அமைத்து, உண்ணாமல் தவமிருந்து, மழையைப் பொழிய வைத்து ஊரையே செழிக்க வைத்தவர் மங்கையர்கரசியார்.

தொண்ணூறு வயது வரை நாள்தோறும், திருவண்ணாமலையைத் தவறாமல் வலம் வந்து, அந்தப் புண்ணியத்தால் அண்ணாமலையானையே நேரில் கண்டு பேறு பெற்றவர் சோணாசலத் தேவர்.

யாழ்பாணத்திலே பிறந்து தில்லையாடியின் பேரருளால் திபரு அருணையிலே பெரும் புதையல் பெற்று, திருக்குளமும், திருமடமும் அமைத்து நல்லறங்களை நாளெல்லாம் கூறி மக்களைக் காத்த ஞானப்பிரகாசர்.

பாதகர்களைத் திருத்துவதற்காக, பழுக்கக் காய்ச்சிய






இரும்புச் செருப்பை அணிந்து நடந்தவர் வீரவைராக்கிய மூர்த்தி சுவாமிகள்.

ஐந்நூறு சீர்களைப் பாடுபட்டு உருவாக்கி, அண்ணாமலையானின் புகழைப் பரப்பியவர். நூல்கள் பலவற்றை எழுதி, சைவ சமயப் பெருமைகளை உலகறியச் செய்த வேதாகம, சமய சாத்திர வித்தகரான அப்பைய தீட்சிதர்.

காணாமற் போன பூஜைப் பேழையை, அண்ணாமலையானின் திருக்கரங்களால் பெறும் பேறு பெற்றவர்; 16ம் நூற்றாண்டில் குருதேவர் மடத்தில் தீட்சை பெற்று சிவப்பிரகாசர் எனும் ஞானியைக் கண்ட ஞானமணி குமாரசாமி பண்டாரம்.

வாய் பேச இயலாத ஊமையாய்ப் பிறந்து, திருவண்ணாமலையானின் பேரருளால் பாடும் திறனைப் பெற்றவர். தில்லையிலே திளைத்து, திருவாரூரிலே தியாகேசர் சன்னதி முன்னால் முக்தி பெற்றவர் தட்சிணாமூர்த்தி சுவாமிகள்.





ஆன்மிகமலர்




ஆன்மிக விஷயங்களின் முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில் பதிவிடப்பட்டுள்ளோம். நமது சேனலில் சென்று முழுவதுமாக பார்த்து பயன் பெறுங்கள்...

ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe
like & share










# ஆன்மிக உலகின்
# முதல் இலவச
# இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த
## அனைத்து இதழ்களையும்
## கட்டணமின்றி

aanmeegamalar.com

aanmeegamalr (app)–ல்

படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**கொரானாவை விரட்டுவோம்**




# வாபரனன் என்பதை வாபர் என்று மாற்றி ஐயப்பன் சரிதத்தில் பொய் கதை புனைந்த அவலம்?

இந்துக்கள் புராணங்கள், வேத மந்திரங்கள், வரலாறு போன்றவற்றில் பல்வேறு இடைச் செருகல்கள் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு விதமாக புகுந்துள்ளது.

அந்த வகையில்சபரி மலை ஐயப்பன்புராணக் கதையில் வாவர்என்பவர் இடைச் செருகளாக சேர்க்கப் பட்டதாக பல்வேறு ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதைப்பற்றி விரிவாக பார்ப்போம்...

சபரிமலை செல்பவர்கள் முதலில்பேட்டை சாஸ்தாவை வணங்கி விட்டுத்தான், ஐயப்பனை தரிசிக்கவேண்டும் என்று ஐயப்பன் புராணம் கூறுகிறது.

பேட்டை சாஸ்தா என்பவர் வாபர சுவாமி என்ற பூத கணங்களின் தலைவர் ஆவார்.

சுவாமி ஐயப்பன் ராணியின் சூழ்ச்சியால் புலிப்பால் கொண்டு வருவதற்கு புறப்பட்டார்.

வனத்தின் எல்லையாகிய எருமேலியில் சிவபெருமான்அனுப்பிய பூதகணங்கள்வாபரன் என்ற பூதகணத்தலைவனின் தலைமையில் ஸ்ரீ ஐயப்பனை சந்தித்து

> “வாபர சுவாமிதான் பேட்டை சாஸ்தா என்பதை மறைத்துவிட்டு, அவரை வழக்கிலிருந்தே பக்தர்கள் மனதிலிருந்து மறக்கவைக்கப் பட்டார். வாபர சுவாமிக்கு பதில் வாவர் சமாதியை கும்பிட ஆரம்பித்தார்கள்.”




மேலே வட்டமிடப்பட்டுள்ள **பேட்டை சாஸ்தா** ஸ்தலத்தில் காட்டுவாசிகள் போன்ற வேடம் தரித்து இங்கிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள **எரிமேலி** (கீழே வட்டமிடப்பட்டுள்ள படம்) வழியாக ஐயப்பனை காணச்செல்லவேண்டும். இங்கிருந்துதான் வாபரணன் என்ற பூதகனம் ஐயப்ப பக்தர்களுடன் வழித்துணையாக வருவார். அருகில் உள்ள இஸ்லாமிய வழிபாட்டுதலம் இடைச்செருகலாக உருவாக்கப்பட்டதாகும்.

வணங்கி நின்றனர்.

ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு மகிஷி சம்ஹாரம் செய்ய அவை உதவியாக நின்றன.

பின் ஐயப்பன் புலிக்கூட்டங்களுடன் பந்தளம் திரும்பினார்.

பூதகணங்கள் வனத்தின் எல்லைவரை உடன் வந்து வழியனுப்பினர்.

அப்போது ஸ்ரீ ஐயப்பன் வாபரனை அழைத்து வனத்தின் எல்லையான எருமேலியில் தங்கி இருக்குமாறும் தன்னை தரிசிக்க காடு வழி யாக சபரிமலை வரும் பக்தர்களை கொடிய வனவிலங்குகளிலிருந்து காத்து வருமாறும் கட்டளையிட்டார்.

புலிக்கூட்டங்களுடன் பந்தளம் திரும்பிய ஐயப்பன் பந்தளமன்னனுக்கு ஆன்மீக உபதேசம் அருளினார்.

தமக்கும் (தர்மசாஸ்தா) வாபரனுக்கும் (பேட்டை சாஸ்தா) வித்தியாசம் இல்லை என்று கூறினார்.

எருமேலியில் வாபரனுக்கு ஒரு கோயில் அமைக்குமாறும் பணித்தார்.

பின் ஒரு அம்பு எய்தார் அந்த அம்பு விழுந்த இடத்தில் தனக்கு பதினெட்டு தத்துவ படிகளுள்ள ஒருகோவில் கட்டுமாறு கட்டளையிட்டுவிட்டு மறைந்தார்.

அதன்படி பந்தள மன்னன் பரிவாரங்களுடன் புறப்பட்டுச்சென்றார். அப்போது வாபரன் மன்ன னை சந்தித்து அவரை பொன்னம்பல மேட்டிற்கு











**1988–ல் ஆஸ்திக மணி கி.சுப்பிரமணிய அய்யர் வெளியிட்ட ஐயப்பன் பெருமை என்ற தமிழ் நூல் முதலிய பல நூல்களை பரிசோதித்ததில் வாவர் பற்றிய கதை ஒரு இடைச்செருகல் என்பது தெளிவாகிறது**

கூட்டிச்சென்று தர்ம சாஸ்தாவிடம் சேர்த்தார்.

மன்னன் ஐயப்பனிடம் உபதேசம் பெற்றார்.

மன்னனுக்கு மனதில் இருந்த எஞ்சியிருந்த சந்தேகங்களும் தீர்ந்து தெளிவுபெற்றார் பந்தள மன்னன்.

ஸ்ரீ ஐயப்பனின் கட்டளையின்படியும் அகத்திய முனிவரின் உபதேசங்களின்படியும் முதலில் எருமேலியில் வாபரனுக்கும், பின் சபரிமலையில் ஸ்ரீ ஐயப்பனுக்கும் மஞ்சள்மாதாவிற்கும் கோயில் கள் அமைத்து பிரதிஷ்டை செய்து உற்சவமும் நடத்தினார்.

எருமேலியில் அமைக்கப்பட்டுள்ள கோயில் பேட்டை சாஸ்தா கோவில் என்றழைக்கப்படுகிறது.

பேட்டை சாஸ்தா என்பது வாபர ஸ்வாமி என்ற பூதத்தலைவன் ஆவார்.

அன்று முதல் தன்னை வணங்கி பேட்டை துள்ளி காடு வழியாக சபரிமலை செல்லும் பக்தர்களை வனவிலங்குகளிடமிருந்து காப்பாற்றி கானகம் கடக்க துணை செய்து வருகிறார் வாபரஸ்வாமி.

புராணப்படி நடைபெற்ற நிகழ்வு இது தான்.

ஆனால் காலமாற்றத்தில் ஒருசில இடைச் செறுகல்கள் சேர்ந்து வாபரன் என்ற பேட்டை






**இந்தியாவில் (கிறிஸ்துவுக்கு பின்) கிபி.610க்குப் பின்புதான் இஸ்லாமியர்கள் ஊடுருவியதாக வரலாறு கூறுகிறது. ஆனால் ஐயப்பன் சரித்திரம் (கிறிஸ்துவுக்கு முன்) கிமு.விற்கு முன் நடைபெற்றதாக கூறப்படுகிறது. அப்படி இருக்கும்போது இந்தியாவிற்குள் வாபர் என்ற இஸ்லாமியர் எப்படி ஐயப்பனின் தோழனாக முடியும்.**




சாஸ்தாவை புறக்கணித்து வாவர் என்ற பொய் கதையை பரப்பிவிட்டுவிட்டனர்.

நமது பாரதநாடு பல நூற்றாண்டு காலம் கொள்ளைக் கூட்டங்களிடம் அடிமைப் பட்டுக் கிடந்தது. அக்காலத்தில் நம்நாட்டு மன்னர்கள் பல்வேறு நிர்பந்தங்களுக்கு பணிந்து கொடுக்க நேர்ந்தது அவ்விதமான ஏதோ ஒரு நிர்பந்தத்துக்கு ஆளாகிய அக்கால பந்தள மன்னன் ஒருவர்,

அமீர்காதி செய்னுதீன் பஹதூர் பாவா பாவர் முசலியார் என்ற முஸ்லீம் குடும்பத்திற்கு எருமேலியிலும் பதினெட்டாம்படியிலும் பள்ளி வாசல் அமைத்து ஐயப்ப பக்தர்களிடம் நிதி வசூல் செய்துகொள்ள அனுமதித்து செப்பு பட்டயம் வழங்கினார்.

எருமேலி பள்ளிவாசலில் சமாதி வைக்கப்பட்டுள்ள இஸ்லாமியரின் பெயர் பாபர் என்றும் பெதருதீன் என்றும் சிக்கந்தர்ஷா என்றும் அலி யார்தங்ஙள் என்றும் பலகருத்துக்கள் உள்ளன.

பள்ளிவாசல்களை அமைத்துக்கொண்டபின் ஐயப்பபக்தர்களிடையே வாவர்என்ற கதை பரப்பினார்கள். ஸ்ரீ ஐயப்பஸ்வாமி வாவர் என்ற கொள்ளையனை வென்றுதோழனாக்கிக் கொண்டதாகவும்வாவர்சமாதியில்வணங்கி விட்டுத்தான் சபரிமலைக்கு செல்ல வேண்டும் என்றும் கதைகட்டினார்கள்.

வாபரசுவாமிதான் பேட்டைசாஸ்தா என்பதை மறைத்துவிட்டு, அவரை வழக்கிலிருந்தே பக்தர்கள் மனதிலிருந்து மறக்கவைக்கப்பட்டார்.

வாபர சுவாமிக்கு பதில் வாவர் சமாதியை கும்பிட ஆரம்பித்தார்கள்.

ஸ்ரீ ஐயப்ப ஸ்வாமிபற்றிய மூலநூல் பூத நாதோபாக்யானம் என்ற சமஸ்கிருத நூல் ஆகும் இது பிரம்மாண்ட புராணத்தில் உட்பட்டது ஆகும். மலையாளத்தில் இதன் மொழிபெயர்ப்பு கல்லறயிக்கல் கிருஷ்ணன் கர்த்தா அவர்களால் 1928–இல் வெளியானது.

இந்நூலின் பெயர் பூதநாதோபாக்யானம்(கிளிப் பாட்டு) என்பதாகும். முதல் மலையாளநூல் இது.

இரண்டாவதாக மூலநூலைத்தழுவி உரை நடையில் மலையாள மொழியில் பி.என்.கிரிஷ்ணுண்ணி என்பவர் 1938–இல் ஸ்ரீ பூதநாதன் என்ற நூலை வெளியிட்டார்.

மேற்கூறிய நூல்களில் வாபர சுவாமியைப்பற்றி கூறப்பட்டுள்ளது. வாவரைப் பற்றி எந்தச் செய்தியும் இல்லை

1946–இல் வித்துவான் குறுமள்ளூர் நாராயண பிள்ளை என்பவர் மலையாள மொழியில் பூதநாத சர்வஸ்வம் என்ற நூலை வெளியிட்டார்.

மேலும் 1984–ல் ஆசிரமம் தாமோதரன் என்பவர் வெளியிட்ட ஐயப்ப சர்வஸ்வம் என்ற மலையாள நூல் 1988–ல் ஆஸ்திக மணி கி.சுப்பிரமணிய அய்யர் வெளியிட்ட ஐயப்பன் பெருமை என்ற தமிழ் நூல் முதலிய பல நூல்களை பரிசோதித்ததில் வாவர் பற்றிய கதை ஒரு இடைச்செருகல் என்பது தெளிவாகிறது.



1938–க்கும் 1946–க்கும் இடையில் சூர்ப்பன் கவி, பாண்டிச்சேவம், பந்தளச்சேவம், இளவர் சேவம், பாலாழிமதனம், ஈழச்சேவம்,வாவரங்கம் என்னும் பெயர்களில் மலையாளமொழியில் பல சாஸ்தாப்பாடல்கள்பாடப்பட்டன. இதைப்படிக்கும் ஐயப்ப பக்தர்கள் பேட்டைசாஸ்தா என்ற வாபரஸ்வாமியை அவசியம் வழிபட வேண்டும்.

– நடராஜன், காஞ்சிபுரம்
போன்: 9444228203

# ஆன்மீக வழியில் அமைதி

ஒவ்வொரு மனிதனின் மனதிலும் மன ஒழுக்கம் அல்லது மன அமைதி, இந்திரிய ஒழுக்கம் அல்லது இந்திரிய அமைதி, கடமையை மட்டும் செய்தல் அதாவது மற்றவற்றில் இருந்து விலகி இருத்தல், சகிப்புத்தன்மை, பொறுமை மற்றும்.நம்பிக்கை அல்லது ஏற்றுக்கொள்ளுதல் போன்ற ஆறு பண்புகளும் நிரம்பி இருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தன்னோட வாழ்வில் தவறாமல், இந்த ஆறு பண்புகளையும் ஆன்மீக சாதனைகள் மூலம் வளர்த்துக்கொள்ள வேண்டும். நமது வாழ்வில் எதிர்பாராத கஷ்டங்கள் வந்தால் அவற்றினை நீக்குவதற்கு எவ்வளவு முயற்சிகள் மேற்கொள்ள முடியுமோ அவ்வளவு முயற்சிகளையும் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு நாம் முயற்சிகளை மேற்கொண்டதற்குப் பிறகு அந்த கஷ்டங்கள் துயரங்கள் நம்மிடம் தொடர்ந்து கொண்டிருந்தால், நாம் பொறுமையுடன் அந்தக் கஷ்டங்களை சகித்துக் கொள்ள வேண்டும்.

நமது கஷ்டங்களை எப்படி சகித்துக்கொள்ள வேண்டுமென்றால் மன மகிழ்வுடன் மன நிறைவுடன் மனதில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது நமது மனதினைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். நமது மனம் பக்குவம் அடைவதற்கு ஆன்மிகம் பெரிதும் துணை புரிகிறது. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் வாழ்வில் இன்பம் துன்பங்கள், விருப்புவெறுப்புகள், மானம் அவமானங்களை வாழ்வில் ஏதோவொரு வகையில் நாம் சந்தித்துத்தான் தீரவேண்டும். அவைகளை நாம் சகித்துக்கொண்டு, பொறுத்துக்கொண்டு மன மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இதிலிருந்து தப்பி ஓடுவதற்கு விலகி இருப்பதற்கு எந்தவிதமான விதி விலக்கும் ஏதும் இல்லை. இதனை பொறுத்துக் கொள்வதற்கு முதலில் அறிவுபூர்வமான அனுபவபூர்வமான ஞானம் அவசியம் வேண்டும்.

நமக்கு வரக்கூடிய துன்பங்களைத் தாங்கிக்கொள்ளக்கூடிய அறிவுபூர்வமான பொறுமை சகிப்புத்தன்மை ஏற்றுக்கொள்ளல் போன்றவை இருக்க வேண்டும். இன்பம் துன்பங்கள், விருப்பு வெறுப்புகள் மானம் அவமானங்கள் போன்றவற்றை மனநிறைவுடன் ஏற்றுக்கொள்வதற்கு பழகுதல் வேண்டும். அத்தகைய கஷ்டமான சூழ்நிலையில் அவற்றை சகித்துக் கொள்ளாமல் அதிலிருந்து தப்பித்துக் கொள்வது என்பது கூடாது. மேலும் அதிலிருந்து பயந்துகொண்டு ஓடுவதோ விலகி இருப்பதோ சரியான வழிமுறைகள் அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அவற்றை புரிந்து கொள்வதோடு அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதற்கு வேண்டும். ஒரு சில சூழ்நிலைகளில் அதனை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு நாம் வந்து விட வேண்டும். மேலும் நமது மனதிற்குள் மன நிறைவுடன் அமைதியுடன் அதனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

நமக்கு துன்பங்கள் துயரங்கள் நாம் விரும்பாமல் இருக்கும்போது எதிர்பாராமல் கஷ்டங்கள் வரும்போது, அதனை ஏற்றுக் கொள்வதற்கு ஆரம்பத்தில் நமக்கு சற்று சிரமம் ஏற்படத்தான் செய்யும். எனவே நாம் விரும்பும்போது வரக்கூடிய கஷ்டங்களையோ எதிர்பார்த்துக்கொண்டு இருக்கும் கஷ்டங்களையோ துன்பங்கள் துயரங்களையோ நாம் சகித்துக்கொள்வதற்கு பொறுத்துக் கொள்வதற்கு ஏற்றுக்கொள்வதற்கு வேண்டும். அதற்கு மனதை ஆன்மீக வழியில் சிந்தித்து மனதினை பக்குவப்படுத்திக்கொள்ள உரிய வழிமுறைகளை காண வேண்டும். அதாவது ஆன்மீக வழியில் நமது உடலையும் உள்ளத்தையும் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு நமது மனதினை சின்னச்சின்ன கஷ்டங்கள் வரும்போது மனதை துன்பப்படாமல் வைத்துக் கொள்வதற்கு பழகிக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு நமது மனதை பக்குவப்படுத்தும்போது நாம் விரும்பாமல் இருக்கும்போது, எதிர்பாராமல் வரக்கூடிய கஷ்டமான சூழ்நிலைகள் வரும்போது அவற்றை மனநிறைவுடன் ஏற்றுக்கொள்வதற்கு பொறுத்துக்கொள்வதற்கு மிக எளிதாக இருக்கும். சிலர்

www.aanmeegamalar.com



மற்றவர்கள் கஷ்டப்படுவதைப் பார்த்து விட்டு, இப்படியெல்லாம் தனக்குத் துன்பங்கள் துயரங்கள் வந்து விட்டால் தன்னால் தாங்கிக்கொள்ளவே முடியாது. தங்கள் உயிரைக்கூட விட்டுவிடுவதற்கு தயாராக இருப்பதுபோல் மற்றவர்களிடம் உணர்ச்சி மிகுதியில் பேசுவார்கள். அவ்வாறு பேசியவர்கள் அல்லது நினைப்பவர்களுக்கு அத்தகையதொரு துன்பங்கள் துயரங்கள் எதிர்பாராமல் நேர்ந்து விட்டால், அவர்களையும் அறியாமலே அத்தகைய துன்பங்களைத் தாங்கிக் கொள்வார்கள். அவர்கள் மற்றவர்களிடம் உணர்ச்சி மிகுதியில் பேசியதுபோல் தங்கள் உயிரை விட்டுவிடுவதற்கு விரும்பமாட்டார்கள். இதனை நாம் அனுபவபூர்வமாக அறிவுபூர்மாக உலகில் பார்த்தும் கேட்டும் உணர்ந்து கொள்ள முடியும்.

எடுத்துக்காட்டாக ஒவ்வொரு மனிதனுக்கும் வயிற்றுப்பசி என்பது நம்மை அறியாமலே வரக்கூடிய ஒரு துன்பம் ஆகும். நமக்குப் பசி வரும்போது நாம் தேவையான உணவை எடுத்துக் கொள்கிறோம். அப்படி நமக்கு வரக்கூடிய பசியை சகித்துக்கொள்வதற்கு பொறுத்துக் கொள்வதற்கு முன்கூட்டியே பழகிக்கொள்ள வேண்டும். அவ்வாறு பழகிக் கொள்ளும்போது அந்த பசி என்ற கொடிய துன்பத்தை நாம் எத்தகைய சூழ்நிலையிலும் எதிர்கொள்வதற்கு முடியும். அதற்கு நாம் முறையாக மாதம் ஒருமுறையாவது ஆன்மீக வழியில் உண்ணாவிரதம் இருக்க வேண்டும். அவ்வாறு உண்ணாவிரதம் இருந்து பழகியிருந்தால், அந்தப் பசி என்ற துன்பத்தினை எதிர்கொள்ளும்போது எளிதில் நாம் பசியைப் பொறுத்துக் கொள்வதற்கு முடியும்.

நாம் நீண்ட தூரம் பயணம் மேற்கொள்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அப்போது நமக்குப் பசி ஏற்பட்டு நாம் உணவு உண்ணும் நேரத்தில் சரியான உணவு கிடைக்காமல் பசியால் துன்பப்பட நேர்ந்தாலும் அப்போது பசி என்னும் துன்பத்தை நாம் உணர்வதில்லை. அதாவது பசியால் வருந்துவதற்கு மாட்டோம். நாம் வாரத்திற்கு ஒருமுறையாவது உண்ணாவிரதம் இருந்து பழகியிருந்தால், பசி என்ற துன்பத்தை உணவு கிடைக்காத சூழ்நிலையில் நமக்கு ஏற்பட்டுள்ள பசியினை விரும்பி பொறுத்துக்கொள்வதற்கு முடியும்.

இதேபோன்றுதான் நாம் ஆன்மீக வழியில் சற்று சிந்தித்துப் பார்த்தால் வாழ்வில் எந்த ஒரு கஷ்டத்தையும் விரும்பி பொறுத்து சகித்துக் கொள்வதற்கு வேண்டும். அவ்வாறு ஆன்மீக வழியில் நமது மனம் சகித்துக்கொள்ளும்போது நாம் விரும்பாமல் அல்லது எதிர்பாராமல் வரக்கூடிய துன்பங்களோ துயரங்களோ நமக்கு அப்போது கஷ்டமாகத் தெரிவதில்லை. அவ்வாறு வரப்பெற்றத் துன்பங்களை எளிதாக (மீணீளீமீ வீமீ மீணீஃஹ்) எடுத்துக் கொள்வோம்.

நம்மை அறியாமல் துன்பங்கள் துயரங்கள் வரும்போது அவைகளை நினைத்து நமது மனம் கவலைப்படக் கூடாது. அவ்வாறு நாம் வருந்துவதால் நமக்கு ஏற்பட்டுள்ள துன்பங்கள் நீங்கி விடுமா? அல்லது நம்மை விட்டு விலகி ஓடி விடுமா? நமது துன்பங்களைப் பற்றி நினைத்ததுக் கொண்டிருந்தால் அதனால் நமது மன அமைதியைத்தான் இழக்க நேரிடும். அதேபோல் அதனை எதிர்கொள்ள பயந்து கொண்டு இருப்பது, அதிலிருந்து விலகி ஓடுவதும் முடிவான தீர்வாகாது. எத்தகைய துன்பங்கள் வந்தாலும் அவைகள் வருவதற்கு முன்பாக கஷ்டத்தை தாங்கிக் கொள்வதற்கு மனதை ஆன்மீக வழியில் சிந்தித்து மனதை பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு மனதை பக்குவப்படுத்திக் கொள்வதற்கு பழகி விட்டால், நமக்கு துன்பங்கள் வரும்போது பொறுத்துக் கொள்ளக்கூடிய பண்பு நாளடைவில் இயல்பாக நமக்கு வந்து விடும். அதனால் நாம் தேடும் விரும்பும் மன அமைதியும் நம்மை அறியாமல் வந்து விடும் என்று ஆன்மிகம் கூறுகிறது.

மனிதன் எந்தவொரு சாதனையையும் மேற்கொள்ளும்போது உலகில் பலவிதமான தொல்லைகள் தடங்கல்கள் இடையூறுகள் போன்றவை ஏதோவொரு வழியில் வரத்தான் செய்யும். அதிலிருந்து நாம் மீளவேண்டும் என்றால் சகிப்புத்தன்மை, பொறுத்துக் கொள்ளுதல், ஏற்றுக்கொள்ளுதல் போன்ற பண்புகள் நம்மிடையே இருக்க வேண்டும். எந்த ஒரு சாதனையை மேற்கொண்டாலும் அந்த சாதனையினை வெற்றிகரமாக முடிக்கும்வரை முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார் என்பதை மனதில் பதிய வைத்து, எப்படிப்பட்ட துன்பங்கள் துயரங்கள் வந்தாலும் உடலையும் உள்ளத்தையும் ஆன்மீக சாதனையில் விடாமுயற்சியுடன் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

நாம் சாதனையில் வெற்றி பெறவேண்டும் என்றால் நமக்கு ஏற்படகூடிய உடல்ரீதியான மனரீதியான துன்பங்களை பொறுத்துக்கொள்ள வேண்டும். மேலும் சகிப்புத்தன்மை கஷ்டங்களை பொறுமையுடன் மனநிறைவுடன் ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவை நம்மிடையே இருக்க வேண்டும். இதற்கு பலவிதமான வழிமுறைகளை நமக்கு ஆன்மீகம் காட்டுகிறது. நாம் சஷ்டி விரதம், கார்த்திகை விரதம், ஏகாதசி விரதம் போன்ற பலவிதமான விரதங்கள் மேற்கொள்வது பற்றி ஆன்மீக வழியில் சிந்தித்துப் பார்த்தால் அதுவும் ஒருவகையில் தவம்தான் என்பதை உணரமுடியும்.

எடுத்துக்காட்டாக சாது ஒருவனிடம் ஓரிடத்தை சுட்டிக்காட்டி ஐம்பது அடி தோண்டினால் புதையல் கிடைக்கும் என்று கூறுகிறார். அவன் அந்த புதையலை எடுக்கும்பொருட்டு சாது தன்னிடம் கூறியதை நினைத்துக்கொண்டு

மிகுந்த ஆர்வத்துடன் நாற்பத்தொன்பது அடிவரை நிலத்தை தோண்டுகிறான். ஒருவித அலுப்புடன் விரக்தியுடன் மீதம் இருக்கும் ஒரு அடியைத் தோண்டுவதற்குள் அவன் பொறுமை இழந்து விடுகிறான். எனவே அந்த இடத்தை விட்டு வெறுப்புடன் தோண்டுவதை விட்டுவிட்டுப் போய்விடுகிறான். அந்த ஒரு அடி தோண்டுவதற்குள் தன்னோட பொறுமையை இழந்து விடுகிறான். அந்த இடத்தில் அவனுக்கு பொறுமை என்னும் பண்பு இருந்தால் புதையலை விடாமுயற்சியுடன் தோண்டி எடுத்து இருப்பான்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

வாழ்வில் ஆன்மீகத்தில் சாதனைகள் மேற்கொள்ளும்போது தொடர்ந்து பொறுமையுடன் எத்தகைய துன்பம் துயரங்கள் இடையூறுகள் வந்தாலும் சாதனைகளைத் தொடர்ந்து செய்வதற்குப் பழக வேண்டும். பொறுத்தார் பூமி ஆள்வார் என்று பழமொழியை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எதனைப் பொறுத்துக் கொள்ளவேண்டுமென்றால் இயல்பாக நமக்கு வரக்கூடிய கஷ்டங்கள், மற்றவர்களால் நமக்கு வரக்கூடிய துன்பங்கள் ஆகியவற்றை பொறுத்துக் கொள்வதற்கு வேண்டும். அவற்றை எதிர்கொள்வதற்கு பழகிவிட்டால், நாம் மேற்கொள்ளும் எந்தச் ஒரு சாதனையிலும் வெற்றி அடைந்து விடுவோம். அது வியாபாரமாக இருக்கட்டும் தேர்வில் வெற்றி பெறுவதாக இருக்கட்டும் ஆன்மீகமாக இருக்கட்டும் எத்தகைய பயிற்சியாக இருந்தாலும் அதில் வெற்றி காணலாம்.

சிலர் தியானத்தில் ஈடுபட்டால் வாழ்க்கையில் மன அமைதி கிடைக்கும் என்ற மிகுந்த ஆர்வத்தில் எதிர்பார்ப்பில் தியானம் செய்வதற்கு தொடங்குவார்கள். ஆனால் அவர்கள் தியானத்தினை தொடர்ந்து செய்யாமல் ஒருவாரமோ இரண்டு வாரமோ செய்துவிட்டு இடையிலேயே பொறுமையிழந்து தியானம் செய்வதை விட்டு விடுவார்கள். அதற்குக் காரணம் தியானத்தின் ஆரம்ப நிலையில் அவர்களுக்கு வரக்கூடிய உடல்ரீதியாக மனரீதியாக வரக்கூடிய இடர்பாடுகள் துன்பங்களை பொறுத்துக்கொள்ள முடியாமல் தியானத்தினை கைவிட்டு விடுவார்கள். எனவே தியானம் தவம் யோகாசனம் போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளும்போது தங்களுக்கு வரக்கூடிய துன்பங்கள் இடர்களை தாங்கிக்கொள்ளக் கூடிய பொறுமை நம்மிடையே முதலில் இருக்க வேண்டும்.

நாம் தியானம் செய்யும்போது ஆரம்பத்தில் பலவிதமான சிந்தனைகள், செயல்கள், கஷ்டங்கள், நண்பர்கள் எதிரிகள் சொந்தபந்தங்கள் எல்லாம் நம்மையும் அறியாமல் நமது கண்முன்னே திரைப்படம்போல் மனதில் ஓடும். இதுபோன்ற இடையூறுகள் பலவிதங்களில் நிழல்போல் தொடர்ந்து வந்துகொண்டுதான் இருக்கும். அதனால் சிலர் பெரும்பாலும் பொறுமையிழந்து தியானம் செய்வதையே விட்டு விடுவார்கள். நாம் பொறுமையை இழந்து விடாமல் தியானம் செய்வதை தொடர்ந்து கடைப்பிடித்து வர வேண்டும். அவ்வாறு தொடர்ந்து கடைபிடிக்கும்போது வேண்டாத எண்ணங்கள் நம்மை விட்டு விலகி, தியானத்தின் மூலம் வரக்கூடிய பலன்களை நாம் அனுபவபூர்வமாக உணர்ந்து கொள்வதற்கு முடியும்.

உலகில் எந்தவிதமான சாதனைகள் மேற்கொண்டாலும் நாம் முதலில் உணர்வது துன்பங்கள் கஷ்டங்களைத்தான் உணர்கிறோம். மனிதன் ஆரம்ப நிலையில் வரக்கூடிய கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டு சகித்துக் கொள்வதற்கு வேண்டும். நமது பொறுமையை இழக்கக்கூடிய துன்பங்கள் இடையூறுகள் போன்றவை வந்தாலும் தியானத்தினை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும் என்ற மன வைராக்கியம் நமக்குள் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் தியானம், தவம், யோகாசனம் போன்றவற்றில் முன்னேற்றம் அடைவதற்கு முடியும். அதாவது தியானம் தொடர்ந்து செய்வதால் வரக்கூடிய இன்பத்தை சுகத்தை முழுமையாக நாம் அனுபவிக்க முடியும். நாம் தியானம், தவம், யோகாசனம் போன்றவைகளை தொடர்ந்து செய்து வரும்போது நமக்குள் நம்மையும் அறியாமல் நம் மனதில் ஒருவிதமான மகிழ்ச்சி ஆனந்தம் புத்துணர்ச்சி போன்றவை ஏற்படுவதை உணர்ந்து கொள்ள முடியும்.

தியானம் மட்டுமல்ல வாழ்க்கையில் வியாபாரம் செய்வதோ படிப்பில் வெற்றி பெறுவதற்கு உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கும் வேறு எந்தவிதமான சாதனைகளையும் வெற்றிகரமாக முடிக்க வேண்டுமானால் நாம் பொறுமையுடன் இருந்து பழகவேண்டும். நாம் எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் கஷ்டத்தை பொறுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு கஷ்டங்கள் தொடர்ந்து வந்தால் அதனை ஏற்றுக்கொள்வதற்கு பழகி விட்டால், நமக்கு நம்மை அறியாமலே கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ளும் ஒரு மனோபலம் வந்து விடும். ஆன்மீக வழியில் மனோசக்தி அடைந்து விட்டால் வாழ்வில் எதிர்பாராமல் வரக்கூடிய துன்பங்களை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளக் கூடிய மனப்பக்குவம்

இயல்பாகவே வந்து விடும்.

நாம் மனோபலத்துடன் இருப்பதற்கு ஆன்மிகம் நமக்கு பெரிதும் துணை புரிகிறது. நமக்கு மனோபலம் இருந்தாலே மன அமைதி தானாக வந்து விடும். பலர் தாங்கள் கஷ்டப்படும்போதுகூட பெரும்பாலும் பயந்து நடுக்கம் கொள்ள மாட்டார்கள். ஆனால் வாழ்வில் நமக்கு ஏதோவொரு சூழ்நிலையில் தீராத கஷ்டம் வந்துவிடுமோ என்று முன்கூட்டியே எதிர்காலத்தை பற்றி நினைத்து வருந்துவார்கள். அவ்வாறு அவர்கள் தங்களுக்குள் கற்பனை செய்துகொண்டு, பயம் கொள்வதுதான் அதிகமாக இருக்கும். நமக்கு வரக்கூடிய துன்பங்கள் துயரங்கள் வருவதற்கு முன்பேஅதனை தாங்கிக் கொள்ளக்கூடிய மனோ பலத்தினை ஆன்மீக வழியில் பெற்று கொள்வதற்கு முடியும்.



அவ்வாறு மனோசக்தியைப் பெற்று விடும்போது எத்தகைய துன்பமாக இருந்தாலும் அதனை தாங்கிக் கொள்வதற்கு எளிதாக முடியும். அதனால் துன்பமோ துயரமோ மனக்கஷ்டமோ வந்துவிட் டால் நமக்கு துன்பங்களாக தோன்று வதில்லை. அதற்கு ஆன்மீக வழியில் மனோபலத்திற்கான பயிற்சியை தவறாமல் மேற்கொள்ள வேண்டும். நமது மனோபலத்திற்கு ஆன்மிகம் பலவிதமான வழிமுறைகளை வழி காட்டுகிறது. பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனிடம் ‘அர்ச்சுனா நீ வாழ்வில் எதிலும் வெற்றியடைய வேண்டுமானால் எந்த நிலையிலும் உனது மனம் நிலைகுலைந்து விடாமல் சமநிலையில் இருக்கும்படி வைத்துக்கொள்’ என்று அர்ச்சுனனுக்கு உபதேசம் செய்கிறான்.

கிருஷ்ண பரமாத்மா தேரோட்ட அர்ச்சுனன் குருஷேத்திரத்தில் நடக்கவிருக்கும் போர்களத்தை சென்று அடைகிறான். அர்ச்சுனன் போர்க்களத்தில் தேரில் நின்றவாறு எதிரே நின்றுகொண்டுஇருக்கும் துரியோதனின் படைகளைப் பார்க்கிறான். அவனிடம் போர் செய்வதற்கு துரியோதனன் சார்பாக துரோணர், பீஷ்மர் மற்றும் துரியோதனனுடைய ஏனைய தம்பிமார்கள் அனைவரும் போர்க்களத்தில் அணி வகுத்து நிற்கின்றனர். அவர்கள் அனைவரையும் கண்டவுடன் அர்ச்சுனன் போர்செய்வதற்கு தயக்கம் கொள்கிறான். அவன் கிருஷ்ணனிடம் ‘கண்ணா நான் எப்படி பயமில்லாமல் போர் செய்வதற்கு முடியும். தனக்கு வில்வித்தை போன்றவைகளை கற்றுத்தந்த குரு துரோணாச்சாரியார் போர்க்களத்தில் என்னோட எதிரில் நிற்கிறார். அவரை எதிர்த்து தான் எப்படி பயமில்லாமல் போரிட முடியும். அவரை போரில் எப்படி கொல்வதற்கு தன்னால் முடியும். போரில்குருவைக் கொல்வதற்கு தனக்கு மனம் வராது என்பதுபோல் பேசுகிறான்.

வில்வித்தை போன்ற கலைகளைக் கற்றுக் கொடுத்த குருவைக் கொன்ற பாவம் என்னை அடைந்துவிடுமோ என அஞ்சுகிறேன். எனக்கு வில்வித்தை போன்றவைகளை நல்ல முறையில் கற்றுத்தந்த துரோணரை போரில் எதிர்த்து நிற்க என்னால் முடியாது’ என்பதுபோல் போர்க்களத்தில் வைத்து கண்ணனிடம் பேசுகிறான். ‘என் பாட்டனார் பீஷ்மர் இருக்கிறார். குருவைக் கொன்று குருத்துரோகம் செய்வதற்கு என்னோட மனம் இடம் கொடுக்கவில்லை. எனது ரத்தபந்தங்களை போர்க்களத்தில் எதிர்த்து நின்று அவர்களைக் கொல்லவும் எனக்கு மனம் வரவில்லை. எனவே நான் போர் செய்ய மாட்டேன் என்று தனது வில்லையும் அம்பையும் பயத்துடன் மனம் சோர்ந்து கீழே போட்டு விடுகிறான்.

பஞ்சபாண்டவர்களுக்கு உரிமையான நாடுகளை வஞ் சகமாகக் கவர்ந்து கொண்டு ஊசிமுனை அளவில்கூட அவர்களுக்கு இடம் தரமாட்டேன் என்று துரியோதனன் இரக்கமில்லாமல் கூறி விடுகிறான். மேலும் அவன் அதர்மத்தில் ஈடுபட்டதினால்தான் பாரதப்போர் நிகழ்வதற்கு காரணமாக இருந்தது. பஞ்சபாண்டவர்கள் இழந்த நாட்டினை மீட்கவும், துரியோதனின் தீய செயல்களைக் கண்டு அவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் அழித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்காக அர்ச்சுனன் கோபத்துடன் போர்க்களம் நோக்கி வேகமாக புறப்பட்டு வந்தான்.

ஆனால் அர்ச்சுனன் போர்களத்தை அடைந்தவுடன் அவனுடைய மனம் மாறி விடுகிறது. அவன் தன் எதிரில் நிற்கும் குரு, பாட்டனார் போன்றவர்களைப் பார்த்தவுடன் பந்த பாசங்களில் வீழ்ந்து விடுகிறான். அதனால் மன உறுதிப்பாடு இல்லாமையால் அவன் போர்க்களத்தில் போர் புரிவதற்கு அவன் மனம் இடம் தரவில்லை என்று கிருஷ்ண பரமாத்மாவிடம் கூறி நிற்கிறான். மேலும் அவன் ஏன் போர் செய்யத் தயங்குகிறேன் என்பதற்கு தனது குரு துரோணாச்சாரியார் மற்றும் தனது சொந்த பந்தங்களை எதிர்த்து போர்க்களத்தில் கொல்ல வேண்டுமே எனக் காரணம் காட்டி ‘போர் செய்யமாட்டேன்’ என்று கோழையைப்போல் பின் வாங்குகிறான். அங்கு அர்ச்சுனனின் மன உறுதிப்பாடின்மை நன்கு வெளிப்படுகிறது.

**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

# விரதம் மேற்கொள்ளும்போது கடைபிடிக்கவேண்டிய 27 வழிமுறைகள்

இந்து மத புராணத்தில் 27வகையான உபவாச விரதங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை,

1. உமிழ்நீரைக்கூட விழுங்காமல் இருப்பது. இதை யோகிகள் மட்டுமே கடைப்பிடிப்பார்களாம்.
2. தென்னை அல்லது இளநீர் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.
3. பசுவின் பாலை மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.
4. எந்த உணவுமில்லாமல் தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் நீரை மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.
5. காலை நேரம் மட்டும் உணவருந்தி உபவாசம் இருத்தல்.
6. பகல் நேர உணவை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
7. இரவு நேர உணவை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
8. மூன்று நாட்கள்தொடர்ந்து காலை நேர உணவை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
9. மூன்று நாட்கள்தொடர்ந்து மதிய நேர உணவை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
10. மூன்று நாட்கள்தொடர்ந்து இரவு நேர உணவை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
11. கடுமையான விரதங்களுக்கு 21 நாட்கள் வெறும் பசும்பால் மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.
12. மூன்று நாட்கள் பகல் ஒருவேளை மூன்று கைப்பிடி உணவை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
13. இரவில் மட்டும் மூன்று கைப்பிடி அளவு உணவு மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
14. ஒருநாள் பகல் நேரத்தில் சுத்தமான எள்ளுப் புண்ணாக்கு மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
15. ஒருநாள் இரவில் மட்டும் பசுவின் பால் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
16. ஒரு நாள் மோரை மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.
17. ஒரு நாள் முழுவதும் சுத்தமான நீரை மட்டுமே அருந்தி உபவாசம் இருத்தல்.
18. ஒரு நாள் முழுவதும் பொரிமாவு (புழுங்கல் அரிசியை வறுத்து நன்கு பொடித்து நெய், தேங்காய், சர்க்கரை ஆகியவற்றைப் போட்டுப் பிசைந்து வைத்திருப்பது) மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
19. ஒரு நாள் முழுவதும் திணை மாவு மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
20. தேய்பிறை அன்று ஆரம்பித்து வளர்பிறை முடிந்து திரும்பத் தேய்பிறை நாட்கள் வரை தினம் ஒருபிடி அன்னத்தை மட்டும் சாப்பிட்டு பின்னர் தினம் ஒவ்வொரு பிடி அன்னத்தை அதிகமாக்கிக் கொண்டு சுக்கிலபட்சம் முடிந்த பிறகு திரும்ப ஒவ்வொரு பிடி அன்னமாகக் குறைப்பது என உபவாசம் இருத்தல்.
21. ஒரு நாள் முழுவதும் வில்வ தழையையும் நீரையும் மட்டுமே அருந்தி உபவாசம் இருத்தல்.
22. ஒரு நாள் முழுவதும் அரச இலைத் தளிர்களையும், நீரையும் அருந்தி உபவாசம் இருத்தல்.
23. ஒரு நாள் முழுவதும் அத்தி இளந்தளிர்களையும், நீரையும் மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.
24. இரு வேளை உணவுடன் உபவாசம் இருத்தல்.
25. முதல் நாள் ஒரு வேளை பகல் உணவு மட்டும், மறுநாள் இரவு மட்டும் உணவுடன் உபவாசம் இருத்தல்.
26. மாமிச உணவுகள், மசாலாக்கள் இல்லாத சைவ உணவுகளை மட்டுமே குறைந்த அளவு சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
27. வாழைக்காய், பூண்டு, வெங்காயம், பெருங்காயம் ஆகியவை சேர்ந்த உணவுகளை மட்டும் சேர்த்துக் கொள்ளாமல் உபவாசம் இருத்தல்.

இந்த உபவாச விரதங்களில் எதைக் கடைப்பிடித்தால் நல்லது என்கிறீர்களா? உங்கள்உடல் நிலைக்கும், சூழ்நிலைக்கும் தகுந்த எந்த உபவாசத்தையும் நீங்கள் தேர்வு செய்து கொள்ளலாம்.

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com


மொபைலில்
ஆன்மிகமலரை
முழுவதும் படிக்க
Google Play Store
aanmeegamalar
டவுன்லோடு செய்து
Google Play
Search
Apps
Categories
Home
Top charts
New releases
My apps
Shop
Games
Family
Editors' Choice
Account
Payment methods
My subscriptions
Redeem
Buy gift card
My wishlist
My Play activity
Parent guide
Aanmeega Malar - ஆன்மீக மலர் - All in One App
mobigoods
News & Magazines
Contains ads
This app is compatible with some of your devices
Installed
ஆன்மிகமலர்
aanmeegamalar
Subscribe
MONEY
இதழ் முழுவதும்
இலவசமாக
படிக்கலாம்...
நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் ஏதுமில்லை
Google Play